# சோதிடமலர்

# SOTHIDA MALAR




## உள்ளே.........

* இம்மாதம் உங்களுக்கு எப்படி?
* வக்கிரகதியும் கிரக பலாபலனும்
* சோதிடம் கற்போம்
* அதிஷ்ட எண் ஞானம்
* பிரார்த்தனைகளும் குழந்தைப்....
* ஆய்வு மன்றம்
* குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல.

* * *


குரோதன ஞூ புரட்டாதி மீ

**(17-9-85—16-10-85)**

விலை ரூபா: **3-00**


**சோதிட அறிவை வளர்க்கப் படியுங்கள் சோதிடமலர்**

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

குரோதன ௵ புரட்டாதி ௴

( 17 - 9 - 85 )

| மலர் 8 | இதழ் 6 |
|---|---|

நமோ தேவி துர்க்கே சிவே பீம நாதே
சதா சர்வசித்தி ப்ரதாத்ரு ஸ்வரூபே
விபூதிஸ் ஸதாம் காளராத்ரி ஸ்வரூபே
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே.

மங்களம் தனுதாம் நித்யம்
துர்க்கா தேவி மகேஸ்வரி
லக்ஷ்மீ சரஸ்வதீ சைவ
தத்யாத் வித்யாம் தினம் சதா

## இறையழகு

''வடிவம் பொருத்தமாக, நன்றாக அமைந்தால் அது அழகு எனப்படுகிறது. ஓசையில் அழகு பொலிவடைந்தால் இசையாகிறது. அசைதலில் பொலியும் அழகு நாட்டியமாகிறது. இவ்விதம் எதன்கண் திருவானது (லக்ஷ்மீகரம்) திகழ்கின்றதோ அது தெய்வமாக இறைவன் எனும் அரும்பதமாகப் பரிணமிக்கிறது"

* * *

மனிதன் சமர்ப்பிக்கும் சொத்துக்களையெல்லாம் இறைவன் மதிக்கின்றானா? ஏற்றுக் கொள்கின்றானா? இல்லை. பக்தியையும் பிரேமையையும் எவன் அர்ப்பணிக்கின்றானோ அவனுக்கு மட்டுமே இறைவன் கருணையுண்டாகிறது. தன் பொருட்டு உண்டாகும் பக்திப் பிரேமைகளையும், விவேக, மன வைராக்கியங்களையுமே இறைவன் ஏற்றுக் கொள்கின்றான், அருளையும் நல்கிறான்.

### இம்மாத விசேடங்கள்

## விநாயக சதுர்த்தி

பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு. வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், அத்துடன் மாமலராள் நோக்குமுண்டாம். இத்துணைப் பெருமை மிக்க விநாயகக் கடவுளைப் பூசிப்பதற்கு உரிய காலம் சதுர்த்தி திதி கூடிய புண்ணிய காலமாகும். சிந்தூரன் என்னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காக்கும்பொருட்டு விநாயகப் பெருமான் அவதரித்த தினமே விநாயக சதுர்த்தி என்னும் புண்ணிய தினமாகும். சதுர்த்தியில் விநாயகரைப் பூசித்த பின்பே சந்திரனைப் பார்க்க வேண்டும் என்பது ஆன்றோர் கூற்று. சதுர்த்தியில் சந்திரனைப் பார்ப்பவர்கள் மிகுந்த துன்பமடைவர். இத்தோஷம் நீங்குவதற்காகவே சதுர்த்தி விரதமனுஷ்டித்து மாலையில் விநாயகரைப் பூஜித்து அவரைத் தரிசித்த பின்னரே சந்திரனைப் பார்க்கும் வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் துன்பம், நோய், வறுமை முதலியன நீங்கி இன்புறுவதுடன் விரும்பிய பேறுகள் யாவும் பெறுவர். இவ்விரத மகிமையைச் சொல்வதால் கர்ப்பவதிகள் சுகப்பிரசவம் ஆவதும், யாத்திரை காலங்களில் சிந்திப்பதால் எவ்வகை இடர்களும் நேராது யாத்திரை சுகமே நிறைவுறுவதும் உண்மையென இந்துக்கள் மத்தியில் நம்பிக்கை இன்றும் கைகூடி வருகின்றது.

## புரட்டாதிச் சனி

புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டுக்கு சிறந்ததாகும். சாதகங்களில் 3-ம், 6-ம், 10-ம், 11-ம் இடங்களில் நன்மையான பலன்களையும், 2-ம், 8-ம் இடங்களில் தீமையான பலன்களையும் சனீஸ்வரன் கொடுக்கிறார்.

சனி தோஷமுள்ளவர்கள் சனிக்கிழமையில் காலையில் நல்லெண்ணெய் வைத்து ஸ்நானம் செய்து சனீஸ்வரனுக்கு எள்ளன்னம் வைத்து நீலப்புஷ்பத்தால் அர்ச்சித்து, எள்ளுத்தீபம் ஏற்றி வழிபாடு செய்து, காகத்துக்கு அன்னமிட்டு பின் உணவருந்த வேண்டும். எள்ளு, நல்லெண்ணெய் என்பன தானம் செய்வதும் நன்மையளிக்கும். இவ்வாறு செய்வதால் தோஷம் நீங்கி சனீஸ்வரனின் திருவருள் கிடைக்கப் பெற்று காரிய சித்தியும், செல்வப்பேறும், நல்வாழ்க்கையும் கிட்டும்.

# நாள் எப்படி?

புரட் 1 செவ் (17-9-85) திதியை பகல் 3-32 வரை, சித்திரை பகல் 3-19 வரை, சித்தம், வயற் கருமங்கள் செய்யலாம். ராகு 3-03 — 4-33

புரட் 2 புத (18-9-85) சதுர்த்தி பகல் 12-33 வரை, சுவாதி பகல் 1-23 வரை, சித்தம், விநாயகசதுர்த்தி விரதம் சுபதினமல்ல. ராகு 12-03 — 1-33

புரட் 3 வியா (19-9-85) பஞ்சமி-சித்தம், காலை 9-48 வரை, விசாகம்-மரணம் பகல் 11-09 வரை, ஷஷ்டி விரதம். முக்கிய கருமங்களை பகல 11-09 இன் மேல் செய்யலாம். ராகு 1-33 — 3-03

புரட் 4 வெள் (20-9-85) ஷஷ்டி காலை 7-24 வரை, ஸப்தமி பி.இ. 5-24 வரை, அனுஷம் - சித்தம் காலை 9-32 வரை, அசுபதினம். ராகு 10-33 — 12-03

புரட் 5 சனி (21-9-85) அஷ்டமி பி.இ. 3-50 வரை, கேட்டை காலை 8-20 வரை, சித்தம், சுபதினமன்று ராகு 9-03 — 10-33

புரட் 6 ஞாயி (22-9-85) நவமி பி.இ. 2-43 வரை, மூலம் காலை 7-33 வரை, அமிர்தசித்தம். அசுப தினம். ராகு 4-03 — 6-03

புரட் 7 திங் (23-9-85) தசமி பி.இ. 2-40 வரை, பூராடம் காலை 7-13 வரை, மரணம், நாள் நன்றல்ல. ராகு 7-33 — 9-03

புரட் 8 செவ் (24-9-85) ஏகதாசி பி.இ. 1-53 வ. உத்தராடம் - மரணம் காலை 7-22 வரை, ஸர்வ ஏகாதசி விரதம். காலை 7-22 இன் மேல் வயற் செய்கை மேற்கொள்ளலாம். ராகு 3-03—4-33

புரட் 9 புத (25-9-85) துவாதசி பி.இ. 2-09 வரை, திருவோணம்-சித்தம் காலை 7-56 வரை, அவசிய கருமங்களைச் செய்யலாம். ராகு 12-02 — 1-32

புரட் 10 வியா (26-9-85) திரயோதசி பி.இ. 2-52வ. அவிட்டம் - சித்தம் காலை 8-57 வரை, பிரதோஷ விரதம். முக்கிய கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 1-32 — 3-02

புரட் 11 வெள் (27-9-85) சதுர்த்தசி பி.இ. 11-02வ. சதயம் பகல் 10-25 வரை, சித்தம், நடேசரபிஷேகம் சுபதினமன்று. ராகு 10-32 — 12-02

புரட் 12 சனி (28-9-85) பூரணை பி.இ. 5-39 வரை, பூரட்டாதி-மரணம் பகல் 12-19 வரை, பூரணை விரதம். பகல் 12-19 இன்மேல் அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-02 — 10-32

புரட் 13 ஞாயி (29-9-85) பிரதமை முழுவதும் உத்தரட்டாதி பகல் 2 37 வரை, அமிர்தம், மஹாளய ஆரம்பம். முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 4-32 — 6-02

புரட் 14 திங் (30-9-85) பிரதமை காலை 7-40 வரை, ரேவதி மாலை 5-18 வரை, சித்தம். நற்கருமங்களை ஆரம்பிக்கலாம். ராகு 7-32 — 9-02

புரட் 15 செவ் (1-10-85) துவிதியை பகல் 10-02 வ. அசுவினி இரவு 8-15 வரை, அமிர்தசித்தம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 3-02 — 4-32

புரட் 16 புத (2-10-85) திரிதியை பகல் 12-37 வ. பரணி இரவு 11-23 வரை, சித்தாமிர்தம், அரிநாள், சுபதினமன்று. ராகு 12-02 — 1-32

புரட் 17 வியா (3-10-85) சதுர்த்தி பகல் 3-19 வ. கார்த்திகை பி.இ. 2-33 வரை, மரணம், கார்த்திகை விரதம், அசுபதினம். ராகு 1-32 — 3-02

புரட் 18 வெள் (4-10 85) பஞ்சமி மாலை 5-54 வ. ரோகிணி-மரணம் பி இ. 5-32 வரை, சுபதினமல்ல. ராகு 10-32 — 12-02

புரட் 19 சனி (5-10-85) ஷஷ்டி இரவு 8-10 வரை, மிருகசீரிடம் முழுவதும், சித்தம், முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-02 — 10-32

புரட் 20 ஞாயி (6-10-85) ஸப்தமி இரவு 9-57வரை, மிருகசீரிடம் காலை 8-08 வரை, சுபகருமங்கட்கு உகந்ததல்ல. ராகு 4-32 — 6-02

புரட் 21 திங் (7-10-85) அஷ்டமி இரவு 11-02 வரை திருவாதிரை பகல் 10-09 வரை, சித்தாமிர்தம், சுபதினமன்று. ராகு 7-32—9-02

புரட் 22 செவ் (8-10-85) நவமி-சித்தம் இரவு11-20 வரை, புனர்பூசம் பகல் 11-27 வரை, அசுபதினம். ராகு 3-02—4-32

புரட் 23 புத (9-10-85) தசமி இரவு 10-47 வரை, பூசம் பகல் 11-58 வரை, சித்தம், சுபதினமல்ல. ராகு 12-02—1-32

புரட் 24 வியா (10-10-85) ஏகாதசி இரவு 9-26வரை ஆயிலியம் பகல் 11-37 வரை, சித்தாமிர்தம், ஸர்வ ஏகாதசிவிரதம் பகல் 11-37ன் மேல் அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 1-32—3-02

புரட் 25 வெள் (11-10-85) துவாதசி மாலே 7-22 வரை, மகம்-மரணம் பகல் 10-36 வரை, அசுப தினம். ராகு 10-32—12-02

புரட் 26 சனி (12-10-85) திரயோதசி மாலே 4-40 வரை, பூரம்-சித்தம் காலே 8-52 வரை, சனிப்பிர தோஷவிரதம். காலே 8-52ன் மேல் அவசியகருமங் கள் செய்யலாம். ராகு 9-02—10-32

புரட் 27 ஞாயி (13-10-85) சதுர்த்தசி பகல் 1-31 வரை, உத்தரம் காலே 6-38 வரை, அத்தம் பி.இ. 4-01 வரை, மஹாளய அமாவாசை விரதம். ராகு 4-32—6-02

புரட் 28 திங் (14-10-85) அமாவாசை பகல் 10-04 வரை, சித்திரை-மரணம் பி. இ. 1-14 வரை, நவ ராத்திரி விரதாரம்பம், சுபதினமன்று. ராகு 7-32—9-02

புரட் 29 செவ் (15-10-85) பிரதமை காலே 6-28 வ. துவிதியை பி இ. 2-54 வரை, சுவாதி - சித்தம் இரவு 10-25 வரை, வயற்செய்கை மேற்கொள்ள நன்று. ராகு 3-02—4-32

புரட் 30 புத (16-10-85) திரிதியை இரவு 11-30 வ. விசாகம் மாலே 7-45 வரை, சித்தம், அவசிய கரு மங்கள் செய்யலாம். ராகு 12-02—1-32

## நவராத்திரி நாட்கள்

"தொண்டர் நாதன் துணைவி பராசத்தி
கண்டகண்கள் களிக்கு மனோன்மணி
கொண்ட நெஞ்சங்குளிரு மருட்சிவை
வண்டுவார் குழலம்மையள்"

இறைவனின் இடப்பாகத்திலிருக்கும் போது உமாதேவியாகவும், காஞ்சிபுரநாதரின் சக்தியாய் காமாட்சியம்மையாகவும், சிதம்பர தாண்டவ மூர்த்தியின் பத்தினியாக சிவகாமசுந்தரியாகவும், பல்வேறு அவதாரங்களில் பல்வேறு திருநாமங் களுடனும் அருளாட்சி செய்யும் இறைவி, நவ ராத்திரியெனும் சக்தி உபாசக காலத்தில் முதல் மூன்று தினங்களும் வெற்றிக்குரிய துர்க்கையம்மை யாகவும், செல்வத்திற்கு அதிபதியாய் விளங்கி நடு மூன்று தினங்களும் மஹாலக்ஷ்மியாகவும், ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கொண்டு கலைச்செல்வியாகி சரஸ்வதி என்னும் நாமமுடை யவளாகவும் காட்சியளித்து உலகையெல்லாம் தன்னருளாட்சிக்குட்படுத்துகின்றாள். இப் பரா சக்தியை துர்க்கை ரூபமாக உபாசித்தால் பய நாசமும், இலக்குமி வடிவமாகப் பூஜிப்பதால் செல்வப் பெருக்கும், கலைச்செல்வியாக வழிபடு வதால் கல்விப்பேறும் உண்டாகின்றது. மூன்று சக்திகளையும் மும்மூன்று தினங்களாக வழிபட்டு ஒன்பதாம் நாளிரவு நாம் உபயோகிக்கும் ஆயு தங்கள், புத்தகங்கள், பொன், வெள்ளி ஆபரணங் கள் இவற்றை சக்தியின் முன்வைத்துப் பூஜித்து மறுநாள் விஜயதசமியன்று குரு வணக்கம் செய்து தேவியின் அருளுடன் ஏடு துவக்குதல், வித்தியா ரம்பம், ஆயுதப்பயிற்சி முதலியன செய்வது தொன்று தொட்டு வரும் செயல்களாகும்.

இவ்வருடம் 14-10-85 திங்கட்கிழமையன்று நவராத்திரி விரதம் ஆரம்பமாகும். 21-10-85 திங்கட்கிழமை மஹாநவமி, சரஸ்வதி பூஜையும் 22-10-85 செவ்வாய்க்கிழமை விஜயதசமியும் இடம்பெறும்.

## விஜயதசமி எப்போது?

விஜயதசமிக்கு ஸாயான்ன வியாபகம் மிகப் பிரதானம். அதாவது நட்சத்திரங்கள் தோற்ற ஆரம்பிக்கும்போது தசமி வியாபகமாக இருக்க வேண்டும். 23-10-1985 புதன்கிழமை பகல் நாளிகை 19-14 (மணி 1-43) க்கு தசமி முடிவ டைந்து விடுகிறது. ஆகையால் முதல் நாளாகிய செவ்வாய்க்கிழமையன்றே விஜயதசமி அனுஷ் டிக்க வேண்டியது சாஸ்திரீயமாம்.

## காமேஸ்வரி பூஜை

நவராத்திரி பூஜையை அடுத்து வரும் பௌர்ணமியன்று காமேஸ்வரி பூஜை விசேடமா கச் செய்யப்படும். எல்லாப் பௌர்ணமித் தின மும் அம்பாளுக்கு விசேடமானவை யெனினும் நவராத்திரியை அடுத்து வரும் பௌர்ணமி மேலும் அதிக விசேடமுடையது தேவர்களைக் கொடுமைப்படுத்தி வந்த மஹிஷாசுரனை மஹா நவமியன்று சம்ஹாரம் செய்து தேவர்களுக்கெல் லாம் அருள் பாலித்தமையால் அடுத்த பௌர்ண மித் தினத்தில் தேவர்களால் அம்பாளுக்கு விசேட மாகப் பூஜிக்கப்பட்ட தினமாகும். இத்தினத்தில் அம்பிகைக்கு மெய்யன்போடு விசேட அபிஷேக ஆராதனை செய்து விழாவெடுத்து வழிபடுபவர்கள் தாம் எண்ணிய எண்ணியாங்கு சகல நற்பலன் களையும் அடைவர்.

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


குரோதன ஹு புரட்டாதி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (17-9-85 முதல் 16-10-85 வரை)

| இங் | தமி | வாரம் | கன்னி | | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுன | கடகம் | சிங்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செப் | புரட் | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல் | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை) (பி.இ) |
| 17 | 1 | செவ் | 6 3 | 8 0 | 10 4 | 12 14 | 2 22 | 4 18 | 6 3 | 7 46 | 9 35 | 11 45 | 1 49 | 3 56 | 5 57 |
| 18 | 2 | புதன் | 5 58 | 7 56 | 10 0 | 12 10 | 2 18 | 4 14 | 5 59 | 7 42 | 9 31 | 11 41 | 1 45 | 3 52 | 5 53 |
| 19 | 3 | வியா | 5 54 | 7 52 | 9 56 | 12 6 | 2 14 | 4 10 | 5 55 | 7 38 | 9 27 | 11 37 | 1 41 | 3 48 | 5 49 |
| 20 | 4 | வெள் | 5 50 | 7 48 | 9 52 | 12 2 | 2 10 | 4 6 | 5 51 | 7 34 | 9 23 | 11 33 | 1 37 | 3 44 | 5 45 |
| 21 | 5 | சனி | 5 46 | 7 44 | 9 48 | 11 58 | 2 6 | 4 2 | 5 47 | 7 30 | 9 19 | 11 29 | 1 33 | 3 40 | 5 41 |
| 22 | 6 | ஞாயி | 5 42 | 7 40 | 9 44 | 11 54 | 2 2 | 3 58 | 5 43 | 7 26 | 9 15 | 11 25 | 1 29 | 3 36 | 5 37 |
| 23 | 7 | திங் | 5 38 | 7 37 | 9 41 | 11 51 | 1 59 | 3 55 | 5 40 | 7 23 | 9 12 | 11 22 | 1 26 | 3 33 | 5 34 |
| 24 | 8 | செவ் | 5 35 | 7 33 | 9 37 | 11 47 | 1 55 | 3 51 | 5 36 | 7 19 | 9 8 | 11 18 | 1 22 | 3 29 | 5 30 |
| 25 | 9 | புதன் | 5 31 | 7 29 | 9 33 | 11 43 | 1 51 | 3 47 | 5 32 | 7 15 | 9 4 | 11 14 | 1 18 | 3 25 | 5 26 |
| 26 | 10 | வியா | 5 27 | 7 24 | 9 28 | 11 38 | 1 46 | 3 42 | 5 27 | 7 10 | 8 59 | 11 9 | 1 13 | 3 20 | 5 21 |
| 27 | 11 | வெள் | 5 22 | 7 20 | 9 24 | 11 34 | 1 42 | 3 38 | 5 23 | 7 6 | 8 55 | 11 5 | 1 9 | 3 16 | 5 17 |
| 28 | 12 | சனி | 5 18 | 7 16 | 9 20 | 11 30 | 1 38 | 3 34 | 5 19 | 7 2 | 8 51 | 11 1 | 1 5 | 3 12 | 5 13 |
| 29 | 13 | ஞாயி | 5 14 | 7 12 | 9 16 | 11 26 | 1 34 | 3 30 | 5 15 | 6 58 | 8 47 | 11 57 | 1 1 | 3 8 | 5 9 |
| 30 | 14 | திங் | 5 10 | 7 8 | 9 12 | 11 22 | 1 30 | 3 26 | 5 11 | 6 54 | 8 43 | 11 53 | 12 57 | 3 4 | 5 5 |
| 1 | 15 | செவ் | 5 6 | 7 4 | 9 8 | 11 18 | 1 26 | 3 22 | 5 7 | 6 50 | 8 39 | 11 49 | 12 53 | 3 0 | 5 1 |
| 2 | 16 | புதன் | 5 2 | 7 0 | 9 4 | 11 14 | 1 22 | 3 18 | 5 3 | 6 46 | 8 35 | 11 45 | 12 49 | 2 56 | 4 57 |
| 3 | 17 | வியா | 4 58 | 6 56 | 9 0 | 11 10 | 1 18 | 3 14 | 4 59 | 6 42 | 8 31 | 11 41 | 12 45 | 2 52 | 4 53 |
| 4 | 18 | வெள் | 4 54 | 6 52 | 8 56 | 11 6 | 1 14 | 3 10 | 4 55 | 6 38 | 8 27 | 11 37 | 12 41 | 2 48 | 4 49 |
| 5 | 19 | சனி | 4 50 | 6 48 | 8 52 | 11 2 | 1 10 | 3 6 | 4 51 | 6 34 | 8 23 | 11 33 | 12 37 | 2 44 | 4 45 |
| ஒக் 6 | 20 | ஞாயி | 4 46 | 6 44 | 8 48 | 10 58 | 1 6 | 3 2 | 4 47 | 6 30 | 8 19 | 11 29 | 12 33 | 2 40 | 4 41 |
| 7 | 21 | திங் | 4 42 | 6 40 | 8 44 | 10 53 | 1 2 | 2 58 | 4 43 | 6 26 | 8 15 | 11 25 | 12 29 | 2 36 | 4 37 |
| 8 | 22 | செவ் | 4 38 | 6 36 | 8 40 | 10 49 | 12 58 | 2 54 | 4 39 | 6 22 | 8 11 | 11 21 | 12 25 | 2 32 | 4 33 |
| 9 | 23 | புதன் | 4 34 | 6 32 | 8 36 | 10 45 | 12 54 | 2 50 | 4 35 | 6 18 | 8 7 | 11 17 | 12 21 | 2 28 | 4 29 |
| 10 | 24 | வியா | 4 30 | 6 28 | 8 32 | 10 41 | 12 50 | 2 46 | 4 31 | 6 14 | 8 3 | 11 13 | 12 17 | 2 24 | 4 25 |
| 11 | 25 | வெள் | 4 26 | 6 24 | 8 28 | 10 37 | 12 46 | 2 42 | 4 27 | 6 10 | 7 59 | 11 9 | 12 13 | 2 20 | 4 21 |
| 12 | 26 | சனி | 4 22 | 6 20 | 8 24 | 10 33 | 12 42 | 2 38 | 4 23 | 6 6 | 7 55 | 11 5 | 12 9 | 2 16 | 4 17 |
| 13 | 27 | ஞாயி | 4 18 | 6 16 | 8 20 | 10 29 | 12 38 | 2 34 | 4 19 | 6 2 | 7 51 | 11 1 | 12 5 | 2 12 | 4 13 |
| 14 | 28 | திங் | 4 14 | 6 12 | 8 16 | 10 25 | 12 34 | 2 30 | 4 15 | 5 58 | 7 47 | 10 57 | 12 1 | 2 8 | 4 9 |
| 15 | 29 | செவ் | 4 10 | 6 8 | 8 12 | 10 21 | 12 30 | 2 26 | 4 11 | 5 54 | 7 43 | 10 43 | 11 57 | 2 4 | 4 5 |
| 16 | 30 | புதன் | 4 6 | 6 4 | 8 8 | 10 17 | **12 26** | **2 22** | 4 7 | 5 50 | 7 39 | 10 39 | 11 53 | 2 0 | 4 1 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்! புரட் 30உ (16-10-85) பகல் 12-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (12-26 — 2-22) மகரலக்னம்

# புரட்டாதி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

3உ (19-9-85) மாலை 5-55க்கு கன்-புத
20உ (6-10-85) பி.இ. 12-27க்கு துலா-புத
25உ (11-10-85) பகல் 3-26க்கு கன்-சுக்
25உ புதன் உதயம்.
18உ குரு வக்ரத்தியாகம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புரட் | 3உ | (19-9-85) | காலை | 5-36 | முதல் | விருச்சிகம் |
| | 5உ | (21-9-85) | காலை | 8-19 | ,, | தனுசு |
| | 7உ | (23-9-85) | பகல் | 1-13 | ,, | மகரம் |
| | 9உ | (25-9-85) | இரவு | 8-23 | ,, | கும்பம் |
| | 12உ | (28-9-85) | காலை | 5-47 | ,, | மீனம் |
| | 14உ | (30-9-85) | பகல் | 5-17 | ,, | மேடம் |
| | 17உ | (3-10-85) | காலை | 6-11 | ,, | இடபம் |
| | 19உ | (5-10-85) | மாலை | 6-53 | ,, | மிதுனம் |
| | 21உ | (7-10-85) | பி. இ. | 5-12 | ,, | கடகம் |
| | 24உ | (10-10-85) | பகல் | 11-39 | ,, | சிங்கம் |
| | 26உ | (12-10-85) | பகல் | 2-21 | ,, | கன்னி |
| | 28உ | (14-10-85) | பகல் | 2-38 | ,, | துலாம் |
| | 30உ | (16-10-85) | பகல் | 2-23 | ,, | விருச்சிகம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி புரட்டாதி மீ 30 உ பகல் 12-30மணிக்கு மகர லக்னம் என அறிந்து கொண்ட பின் மகரம் என்ற கூட்டில் 'ல'என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது மீனலக்கினம் உதயமாகிறது. இலக்கினாதிபதி 11ல் நீசமடைகிறார். சனி விருச்சிகத்தில் இருந்து செவ்வாயின் பார்வையைப் பெறுகிறது. நாட்டில் அமைதியின்மை இருந்துகொண்டிருக்கும். ஆங்காங்கே அசம்பாவிதங்கள் ஏற்பட இடமுண்டு அரசியல் பெரியார்கள் பாதிக்கப்பட நேரிடும். பிறநாட்டு வர்த்தகத் தொடர்புகளும் பாதிப்படையும். கடல் மார்க்கத்தில் விபத்துக்கள் ஏற்படலாகும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (புரட்டாதி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 03 நிமிஷம்)

| வாரம் | 6...03<br>7...03 | 7...03<br>8...03 | 8...03<br>9...03 | 9...03<br>10...03 | 10...03<br>11...03 | 11...03<br>12...03 | 12...03<br>1...03 | 1...03<br>2...03 | 2...03<br>3...03 | 3...03<br>4...03 | 4...03<br>5...03 | 5...03<br>6...03 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# சோதிடம் கற்போம்

"ஞானி"

ஆறும் பாவம்

## சத்துரு பாவம்

இப்பாவத்தின் பிரதான காரகம் சத்துரு ஆதலின் இப்பாவம் சத்துரு பாவம் எனப்படும்.

இதன் காரகங்கள் சத்துரு, வயிறு, ரோகம், விரணம், சிறை, துக்கம், வழக்கு, பந்து சன விரோதம், திரவிய நாசம் ஆகியனவாகும்.

சத்துரு ஸ்தானாதிபன் சத்துருக்களின் மூலம் ஜாதகருக்குத் தொல்லை கொடுத்தற்குரியவர். உயிரும் உடலும் இலக்கின காரகமாதலின் ஆறுதிபன் இலக்கினத்திலிருந்தால் சாதகியின் உயிரும், உடலும் சத்துருக்களால் துன்புறுத்தப்படக் கூடும்.

ஆறுதிபன் ஏழில் அல்லது பத்தில் நிற்கப் பிறந்தவர்களுக்கு சத்துருக்கள் அதிகமாக இருப்பர் எனச் சோதிட நூல்கள் கூறும். ஆறுதிபதி ஏழில் நின்றால் இலக்கினத்தைப் பார்ப்பதன் காரணமாக துன்பம் அதிகரிக்கச் செய்யும். 10ம் இடம் கீர்த்திக்குரியது. பத்தில் ஆறுதிபன் நின்றால் கீர்த்தியைக் குறைக்கச் செய்து மனதில் வெறுப்பையும், துன்பத்தையும் உண்டு பண்ணும். ஆறும் வீட்டில் பாபக்கிரகங்கள் இருப்பதும் சத்துருக்களுண்டாவதற்கு ஏதுவாகும்.

மூன்று, ஆறு, பதினொராம் இடங்கள் உபஜயஸ்தானங்கள் என்று சொல்லப்படும். இத்தானங்களில் பாபர் நிற்பது நற்பலனைக் கொடுக்கக் கூடியது.

கிரகங்கள் ஒரே இடத்திலிருந்து சில காரணம் பற்றி நற்பலனையும், சில காரணம் பற்றித் துர்ப்பலனையும் கொடுப்பர். குரு சுபக்கிரகமாதலின் பொதுவாக அவருக்கு நற்பலன் கூறலாமெனினும், அவர் ஆறுதிபனாயமையின் நோயைக் கொடுக்குந் துர்ப்பலனைச் செய்வர் எனலாம். இவ்வாறு ஆறுமிடம் இருதிறப்பட்ட பலனைக் கொடுக்கும். ஆறுதிபன் பெலமடைந்திருப்பின் ஆறுமிடம் உபஜயஸ்தானமாகி நற்பலனைக் கொடுக்கும். அவர் பெலவீனமடைந்திருப்பின் இப்பாவம் மறைவுஸ்தானமாகி துர்ப்பலனைக் கொடுக்கும். அட்டமாதிபன் அல்லது பன்னிரண்டாதிபதிபனோடு பரிவர்த்தனஞ் செய்யின் பரிவர்த்தன பெலமடையும். இன்னும் அட்டமாதிபன் பன்னிரண்டாதிபன் பார்த்தால் ''கெட்டவன் கெட்டிடக் கிட்டிடும் இராசயோகம்'' என்றபடி யோக பெலமடையலாம்.

நோய் ஆறுமிடத்தின் காரகங்களுளொன்று. இலக்கினம் பெலமடைவதுடன் மேலே காட்டிய பெலன்கள் ஆறுதிபனுக்கிருப்பின் நோயற்றவாழ்வு உண்டு. இலக்கினமும், சுகத்தானமாகிய நான்காமிடமும் பெலவீனப்படின், எந்தக் கிரகம் நோயைக் கொடுப்பதற்குத் தொடர்பு பட்டிருக்கிறதோ அக்கிரகத்தின் காரகமாயுள்ள நோய் சாதகிக்குண்டாகும்.

நான்காதிபதி பெலவீனப்பட, சந்திரன் ஜலராசியிலிருக்க செவ்வாய் பார்க்கில் தொய்வு நோய் உண்டாவதற்கு ஏதுவாகும். அல்லது பீனிசமாவது காட்டும். செவ்வாய் உஷ்ணக் கிரகம், சந்திரன் ஜலக்கிரகம். இதன் காரணமாக செவ்வாயின் பார்வை பெற்ற சந்திரன் உடம்பில் சளித்தன்மையைக் கூட்டும்.

இராசி மண்டலத்தில் ஆறும் ராசி கன்னியாகும். ஆகவே நோயை ஆராயும்போது கன்னி ராசியும் ஆராயப்பட வேண்டும். கன்னியில் குரு, சனி, ராகு மூவருமிருக்க கசரோகம் ஏற்படக் கூடும். குரு இரத்த சம்பந்தமுடையது. சனி நரம்பு சம்பந்தமான ரோகத்தைக் கொடுப்பர். இராகு விஷநீர் சுவாச சம்பந்தமான ரோகத்தைக் கொடுப்பர். இம்மூன்று கிரகங்களும் நோய்க்குரிய கன்னி ராசியிலிருக்க, சுகத்தைக் கொடுக்குஞ் சந்திரனும், நான்காதிபனும் பெலவீனமடைய மூச்சு நோய் அல்லது கசரோகமுண்டாகும்.

ரோகத்தானம் சலராசியாய், அதில் சந்திரன் பெலவீனப்பட ஆறுதிபன் சலராசியிலிருந்து புதனது தொடர்பு பெற சாதகனுக்கு சலாசய சம்பந்தமான நோய் தோன்றும். (வளரும்)

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 61

# புரட்டாதி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

17-9-85 — 16-10-85

சூரியன்: 16-9-85 இரவு மணி 7-45 இல் கன்னி ராசிப்பிரவேசம்.
17-9 85 உதயம் காலே 6-03
அஸ்தமனம் மாலே 6-07
16-10-85 உதயம் காலே 6-02
அஸ்தமனம் மாலே 5-51

சந்திரன்: 22-9-85 பூர்வஅஷ்டமி இ. 3-50 a.m,
29-9-85 பூரணை இரவு 5-39 a.m.
7-10-85 அபர அஷ்டமி இரவு 11-02
14-10-85 அமாவாசை பகல் 10-04
15-10-85 சந்திரதரிசனம்

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 11-10-85இல் மேற்கில் உதயமாகும். மாதமுடிவில் மேற்கு வானில் 15 பா. உயரத்திற் காணப்படும், 19-9-85 இல் கன்னி ராசியிலும் 6-10-85 றில் துலா இராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கிழ் வானத்தில் 30 பாகை உயரத்தில் காட்சியளிக்கும் இக்கிரகம் மாதமுடிவில் 23 பாகை உயரத்தில் காணப்படும். 11-10-85ல் கன்னி ராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாதத்தொடக்கத்தில் சூரிய உதயம் முன் கிழ் வானில் 19 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 30 பாகை உயரத்தில் தோற்றும். இம்மாதம் முழுவதும் சிங்க ராசியிலேயே சஞ்சரிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின்மேல் கிழக்கு வானில் பிரபையுடன் 46 பாகை உயரத்தில் காட்சியளிக்கும் இக்கிரகம் மாதமுடிவில் 75 பாகை உயரத்தில் (உச்சிக்கு 15 பாகை கிழக்கில்) காட்சியளிக்கும். வக்கிரகதியில் சென்றுகொண்டிருந்த இக்கிரகம் 4-10-85ல் வக்கிரகதி நீங்கப்பெற்று நேர்கதியிற் செல்லத் தொடங்கும். இம்மாசம் முழுவதும் மகர ராசியில் திருவோணம் 2-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனமானதும் மேற்கு வானில் 60 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 34 பாகை உயரத்திற் காணப்படும். இம்மாதம் முழுவதும் விருச்சிக ராசியில் விசாகம் 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கின்றது.

இந்திரன் (Uranus): இம்மாதம் முழுவதும் விருச்சிக ராசியில் கேட்டை 2-ம் பாதத்தில் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune): தனு ராசியில் மூலம் 3-ம் பாதத்திலேயே இம்மாதமும் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto): 2-10-85 இல் துலா ராசியில் சுவாதி 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

## சமாகமாதிகள்

19-9-85 காலேயில் சந்திரனுக்கு வடக்கு சனி 3 பாகை. அஸ்தமனத்தின்பின் அவதானிக்க.

21-9-85 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கில் மக நக்ஷத்திரம் ½ பாகை. விடியற்காலேயில் அவதானிக்கவும்.

23-9-85 சரத் விஷு தினம். சமராத்ரி தினம்.


24-9-85 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு வியாழன் 4 பாகை. அஸ்தமனத்தின்மேல் அவதானிக்கவும்.

5-10-85 அதிகாலே 4-30 மணியளவில் சந்திரனுக்குத் தெற்கில் செவ்வாய் மிகச் சமீபமாக ஒட்டினுற்போல் காணப்படும். இக்காட்சி பார்ப்பதற்கு மிக அழகாகத் தோற்றும்.

12-10-85 காலே 6-30 மணியளவில் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 3 பாகை. பகல் 2-30 மணியளவில் சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 3 பாகை. இவ்விரண்டையும் சேர்த்து அதிகாலேயில் அவதானிக்கவும். சந்திரன், செவ்வாய், சுக்கிரன் மூன்றும் முக்கோணமாகத் தோற்றுவது கண்கவர் காட்சியாகும்.

15-10-85 பகல் சந்திரனுக்குத் தெற்கு புதன் 1 பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

# இம்மாதம் உங்களுக்கு எப்படி



## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 17-9-85 முதல் 16-10-85 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம்கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் 6ல் சுவர்ணமூர்த்தியாகிப் பலம்பெறுவது நன்மையாகும். கடந்தகாலங்களில் நிகழ்ந்த கஷ்ட நஷ்டங்களில் இருந்து விடுதலை ஓரளவில் கிடைக்கும். தேகசுகம், குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானம் கூடும். மூன் தடைப்பட்டிருந்த காரியங்கள் கைகூடிவரும்: அட்டமத்துச் சனீஸ்வரனின் கோசாரமும், குரு-செவ்வாய் துர்க்கோசாரமும் சேர்ந்து நிகழுவதால் விபத்துக்கள், அவமிருத்துக்கள், புத்திரர்களாலும் சகோதரர்களாலும் துன்பங்கள் நேரலாம்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப வருமானம் அதிகரிக்கும், குடும்பசுகம் அபிவிருத்திகாணும்; புத்திரர்-சகோதரர் வழியில் செலவுகள் துன்பங்கள் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு நிதி முதலீடுகளில் பற்றுக்குறைவு ஏற்படும். வியாபார மந்தநிலையே தொடரும். வாடிக்கையாளர்களின் மனம் மாற்றமடையக்கூடிய சந்தர்ப்பங்கள் கூட ஏற்படும்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும் பதவி உயர்ச்சிச் சிபார்சுகளும் கிடைக்கும். உடன் உத்தியோகத்தர்கள், கீழ்உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக் குறைவுறும்.

விவசாயிகளுக்கு பயிருற்பத்தி பெரிதும் குறைவுறும். உற்பத்திச் செலவுகளும் கூலியாட்களின் கெடுபிடிகளும் கூடும். வாழ்க்கைத்தரம் பெரிதும் பாதிப்புறும்.

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைப்பினும் ஊதியக்குறைவே தொடரும். ஒப்பந்த வேலைகளுக்குத் தொழிலாளிகளின் ஒத்துழைப்புக் கிடையாது. தொழிற்பிணக்குகள் அடிக்கடி ஏற்படும்.

மாணவர்களின் கல்விக் குழப்பநிலை நீடிக்கும். மாணவர் மத்தியில் விரக்தியும் வெறுப்பும் வலு

வடையும். ஆசிரியர்களுடன் மாணவர் கருத்து வேறுபாடுகள் வளரும். பரீட்சைத் தேர்ச்சிகளும் திருப்திதராது.

பெண்களுக்கு குடும்ப உறவுகள் வலுவடையும். குடும்பவருமானம் திருப்தி தரும். குடும்பத்தில் விவாகாதி முயற்சிகளில் தடைதாமதங்கள் ஏமாற்றங்கள் இம்மாதமும் தொடரவேசெய்யும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 21பக.22,26,27.
அக் 1,2,6,7,11.

துரதிஷ்ட நாட்கள். செப் 19,20,21,28,29,30.
அக் 12,13,16.



## இடபம்

கார்த்திகை2,3,4, ரோகிணி, மிருகசிரிடம்1,2-ம்கால்

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்குச் சூரியபகவான் 5ல் ரஜதமூர்த்தியாகி சமபலத்துடன் சஞ்சாரம் செய்கின்றார். செவ்வாய் 4ல் சஞ்சாரம் செய்கின்றார். செவ்வாய் 4ல் சஞ்சாரம் செய்வதும் சனியும் யுரேனசும் 7ல் சஞ்சாரம் செய்வதும் தீமையானாலும் இந்த இராசியைக் குருபகவான் திரிகோணத்தில் இருந்து பார்ப்பதால் எவ்வகைத் துன்பங்களையும் சமாளித்துவிடுவார்கள். தேகசுகம் பாதிப்படையமாட்டாது. வீடு, வாகன, பொருள் நட்டங்களும் அக்கினி ஆயுத பயமும் சிலருக்கு ஏற்படலாம்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப சுகவீனம் முதலானவை அடிக்கடி ஏற்படும். புத்திரர் சகோதரர் உதவிகளுக்குப் பதிலாக உபத்திரவங்கள் கூடும். குடும்பவருமானம் சுமாராக இருக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரமுதலீடுகள் எதிர்பார்ப்புகளைக் கொடுக்கமாட்டாது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் பிரதிகூலம் தரும். வங்கி முதலீடுகள் குறைவுறும்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும் கெடுபிடிகளும் ஏகநேரத்தில் இடம் பெறும். காரியாலயங்களில் கடமை செய்வதில் பலவிதமான சிக்கல்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் தொடரும். குத்தகைக்கு விவசாயம் செய்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். கூலியாட்களின் கெடுபிடிகளும் உற்பத்திச் செலவும் அதிகரிக்கும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தாலும் தொடர்ந்து வேலைசெய்ய முடியாத சூழ்நிலைகள் அடிக்கடி ஏற்படும். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை குறைவுறும்.

மாணவர்களுக்கு மனக்குழப்பமும் மறதியும் கல்வி முன்னேற்றத்திற்குத் தடைக்காரணிகளாக அமையும். எவ்வாறாயினும் சுய முயற்சியுடன் கல்வியைத் தொடருவதால் பரீட்சைத் தேர்ச்சிகள் திருப்திதரக்கூடும்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகள் பகீரதப்பிரயத்தினுல் கைகூடிவரும். காதல் முதலான உறவுகளில் உணர்ச்சிவசப்படுதலைக் தவிர்த்தலால் ஏமாற்றமடையாது தப்பிக்கொள்ளுவார்கள்.

அதிஷ்ட நாட்கள்: செப் 24,25,28,29,30.
அக் 3,4,8,9,13.

துரதிஷ்ட நாட்கள்: செப் 17,18,21,22.
அக 1,2,15,16.



## மிதுனம்

மிருகசிரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

மிதுன இராசியில் செனனமானவர்களுக்குச் சூரியபகவான் 4ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் இந்தமாதம் சஞ்சாரம் செய்வதும் குருபகவான் அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதும் நற்பலன்களிலும் பார்க்கத் தீயபலன்களே கூடுதலாக நிகழ்வதற்கு ஏதுவாகும். தேகநலம் அடிக்கடி பாதிப்புறும். குடும்பத்தில் துன்பங்களும் சோகசம்பவங்களும் நிகழும். வருமானம் குறைவுறும். அநாவசியச் செலவுகள் தவிர்க்க முடியாத தாய் வளரும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப சுகவீனம் துயரம்தரும். குடும்பவருமானம் பெரிதும் குறைவுறும். குடும்பப்பெரியவர்களின் விரோதங்களையும் வெறுப்புக்களையும் எதிர்நோக்க நேரலாம்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் நேர்மையும் பொறுமையும் பலவழியிலும் சோதனைகளுக்குள்ளாகலாம் என நவநாயகர்கள் எச்சரிக்கின்றனர். புதுமுதலீடுகளைக் கூடியவரை தவிர்த்தல் நல்லது. வியாபார மந்தநிலையே தொடரும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடு பிடிகள் அதிகரிக்கும். கஷ்டப்பிரதேச இடமாற்றம், பதவிஇறக்கம் அல்லது பதவிநீக்கம் கூடச் சிலருக்கு ஏற்படலாம், வருமானத்திலும் செலவுகளே அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி மனமகிழ்வைத் தரும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சந்தைவாய்ப்புக்கள் திருப்திதராது.

தொழிலாளர்களுக்குள் கருத்து வேற்றுமைகள் பெரும்பாலும் நீங்கி விடும். வேலைவாய்ப்புக்கள் பெரும்பாலும் குறைவுறும். வருமானக் குறைவால் வாழ்க்கைத்தரமும் குறையும்,

மாணவர் கல்விக்குழப்பநிலை நீடிக்கும். கல்வி அதிகாரிகள் - மாணவர் கருத்து வேறுபாடுகள் விசுவரூபமெடுக்கும். மாணவரின் கல்வி நாட்டம் பெரிதும் குறைவுறும்.

பெண்களுக்கு- கன்னிப் பெண்கள் முன் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய காலம். காதல் முயற்சிகள் பெரும்பாலும் தோல்வி அல்லது அவமானத்தையே தழுவநேரலாம். வேலை செய்யும் பெண்களின் நற்பண்புக்குச் சோதனை ஏற்படலாம்

அதிஷ்டநாட்கள்: செப் 17, 18, 26,27,30இரவு
அக் 1,2,6,7,11,15

துரதிஷ்டநாட்கள்: செப் 19, 20, 24, 25.
அக் 3, 4, 5பகல் 16பி.ப




புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல் தாம்ரமூர்த்தியாகி வலம்வருதல் நன்மை கலந்த தீய பலன்களையே அனுபவிக்க நேரும். குரு பகவான் 7ல் இருந்து திருஷ்டிசெய்வதால் எதனையும் சமாளித்தும் விடுவார்கள். தேகசுகம் - குடும்பசுகம் முதலானவை அடிக்கடி பாதிப்புறும். பொருள்வருமானம் பெரிதும் குறைவுறும். சிந்தனைக்குறைவால் செய்யும் காரியவினைவுகளை நினைத்து கவலைப்பட நேரும்.

குடும்பத்தவர்களுக்கு சிறு சிறு பிணக்குகள் குடும்பத்தில் தோன்றி அமைதிக் குறைவை ஏற்படுத்தும். புத்திரர் செலவும் கவலைக்குரிய சம்பவங்களும் ஏற்படும். குடும்பத்தில் பெரியவர்களின் உதவிகள் இவர்களுக்கு ஆறுதல் தரும்.

வர்த்தகர்களுக்கு எதிர்பாராத லாபங்கள் கிடையாவிட்டாலும் நட்டம் ஏற்படமாட்டாது. பவுண் பொன் வியாபாரம் லாபம் தரும். வங்கி -நிதி வசதிகள் சீராக இருக்கும். ஆனால் புது முதலீடுகள் எதிர்பார்த்த லாபம் தரமாட்டாது.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிச் சுதந்திரம் குறைவுறும். அதிகாரிகளின் உத்தரவுகளைச் செயல்ப்படுத்துவதில் சிரமங்களும் சிக்கல்களும் ஏற்படும். சக உத்தியோகத்தர்களின் நல்லெண்ணம் குறைவுறும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையில் முன்னேற்றம் குறைவுகாணும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் குறைவுறும். இயற்கை ஏதுக்கள் அல்லது மிருகவர்க்கத்தால் அவ்வப்போது பயிரழிவுகளும் ஏற்படும்.

தொழிலாளர் மத்தியில் தொழில் பிணக்குகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் தோன்றும். ஒப்பந்த வேலைகளை உரிய காலங்களில் செய்து முடிக்க முடியாத நிலை ஏற்படும்.

மாணவர் கல்வியூக்கம் ஏற்பட்டு முயற்சித்தாலும் கல்வி அதிகாரிகள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பர். எவ்வாறாயினும் கலைத்துறை -சட்டத்துறை மாணவரின் கல்வி முன்னேற்றம் உண்டாகும்.

பெண்களுக்குத் தடைதாமதங்களுக்கு மேல் விவாகாதி சுபநிகழ்ச்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். காதல் விவகாரங்களில் முன்யோசனை தேவை. குடும்பப்பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பு ஆதரவுகளைப் பெறுவதில் பிறர் தலையீடுகள் தடையாகியும் விடலாம்.

அதிஷ்டநாட்கள்: செப் 19,20,28,29.30 பகல்
அக் 3,4,5 பகல் 8, 9, 13

துரதிஷ்டநாட்கள்: அக் 21பகல்22,26,27
அக் 5இரவு6,7




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்கு சூரிய பகவான் 2ல் ரஜதமூர்த்தியாகிச் சாதாரணபலத்

துடன் சஞ்சாரம் செய்வதும் மற்றும் பிரதான கிரகங்களான குரு, சனி, செவ்வாய், ராகு முதலியோரின் துர்க்கோசர சஞ்சாரமும் நன்மைதராது. பொதுவாக இவர்களுக்கு காரியத்தடை தாமதங்கள், உடல் - உளத்தாக்கங்கள், பகை விரோதங்கள், அந்நியர் தலையீடுகள், பொருள் நட்டங்கள் முதலான சம்பவங்கள் அடிக்கடி ஏற்படலாம். வாக்கு விரோதம் முதலானவற்றுல் சிலருக்குப் பதவியிழப்பு ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பசுகம் சுமாராக இருப்பினும் அநாவசியச் செலவுகள் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் தோன்றிமறையும். புத்திரர் துன்பம் தொடரும்.

வர்த்தகர்களுக்குச் சோதனையான காலமாக அமையும். நிதிவசதி குறைவுறும். புது முதலீடுகளைக் கூடியவரை தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு பதவி இறக்கம் அல்லது பதவி நீக்கம் கூடக்கிடைக்கலாம். சக உத்தியோகத்தரின் உதவிகள் குறைவுறும். எதிர்பாராத கஷ்டமான இடமாற்றங்கள் கூடச் சிலருக்கு ஏற்படலாம்.

விவசாயிகள் பயிர்ச்செய்கையில் பலவித பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி வரும். பயிரழிவும் ஏற்படும். விளைவுகளைச் சந்தைப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படும்.

தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புகள் குறைவுறும். தொழில் பிணக்குகள் வலுவடையும். தொழில் ஒப்பந்தங்களில் லாபம் கிடையாது.

மாணவர் கல்விக் குழப்பநிலை தோன்றும். கல்விக் கூடங்களில் கல்விப்போதனை வசதிகள் குறைவுறும். கல்வித்தேர்ச்சியும் திருப்தி தருவது அபூர்வமே.

பெண்களுக்குப் பல விதத்திலும் கஷ்டநஷ்டங்கள் ஏற்படும். உணர்ச்சிவசப்படுவதால் ஏமாற்றங்கள் அவமிருத்துக்கள் கூடச் சிலருக்கு ஏற்படலாம். சிலருக்கு மர்மமான ஆனல் சொல்ல முடியாத விநோத நோய்கள்கூட ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள்: 17,18,21,22,23,30.
1,2,5,6,7,11,15.

துரதிஷ்ட நாட்கள்: செப் 24,25,28,29,30;
அக் 8,9,10.



# கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2-ம் கால்

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு சூரியபகவான் இம்மாதம் 1ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்திபலம் பெற்றுத் தானபலமிழந்து சமபலத்துடன் சஞ்சாரம் செய்வதால் சமபலன்களே அதிகம் நிகழும். சனிபகவானின் சுபகோசாரமும் குருபகவானின் திருஷ்டியுடன் சுபகோசாரமும் இவர்களுக்கு அதிஷ்டமாகும். தேகசுகம் குடும்பசுகம் முதலியன சீராக இருக்கும். பொருள்வருமானம் திருப்தி தரும். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகளும் நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு அமைதியும் ஆறுதலும் கிட்டும். வருமானம் திருப்திதரும். புத்திரர் உதவிகளும் கிடைக்கும். தூரதேசப் பொருள்வரவும் கிடைக்கும்.

வர்த்தகர்கட்கு எண்ணியவை எண்ணியாங்கு வியாபார முன்னேற்றம் ஏற்படும். புது முதலீடுகள் செய்ய ஏற்றகாலம்.

உத்தியோகத்தர்களுக்கு கடமைகளைச் செய்வதில் எப்போதும் 'தரும சங்கடமான நிலை' ஏற்படும். சகஊழியர்கள் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அனுதாபமும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச் செழிப்பும் உற்பத்தியும் அதிகரிக்கும். கூலியாட்களின் ஒத்துழைப்பு மிகும். வருமானமும் வாழ்க்கைத்தரமும் வளர்ச்சி காணும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும். நாட்கூலிகளுக்கும் தொடர்ந்து வேலை கிடைக்கும். முன் ஏற்பட்ட தொழிற்பிணக்குகள் சுமுகமாக முடிவுபெறும்.

மாணவர்கள் கல்வி வளர்ச்சிச் சாதனங்கள் வசதிகள் அதிகரிக்கும். மாணவர் கல்வியூக்கமும் சுயமுயற்சியும் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். உயர்கல்வி வாய்ப்பும் சிலருக்குக் கிடைக்கும்.

பெண்களுக்கு விவாகசித்தியேற்படுவதிலுள்ள தடைகள் நீங்கும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் அன்பு ஆதரவு கிடைத்தாலும் அனாவசியச் செலவுகளும் குடும்பப் பிணிபீடைகளும் கூடவே நிகழும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 19,20,21,24,25.
அக் 3,4,5,8,9.
துரதிஷ்ட நாட்கள்: செப் 26,27,30.
அக் 1,2,11.



# துலாம்

சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இந்தமாதம் 12ல் லோகமூர்த்தியாகி இருவகைப் பெலமும் குறைந்து சஞ்சாரம் செய்வது நன்மையல்ல. மேலும் ஏழரைச்சனியின் காலமும் குருவின் துர்க்கோசார சஞ்சாரமும் சேருவதும் சிந்தனைக்குரியதே! பொதுவாக இவர்களுக்குத் தேகநலம் - குடும்பநலம் முதலானவற்றில் பாதிப்புக்கள் ஏற்படும். பொருள் வருமானத்திலும் செலவுகள் கூடும். தெய்வபக்திதான் இவர்களுக்கு ஆறுதலளிக்கும்.

குடும்பத்தின் வருமானம் அதிகரிக்கும். ஆனல் குடும்பாதிபன் செவ்வாய் சுக்கிரன் சேர்க்கை பெறுவதும் குடும்பத்தானத்தில் சனி இருப்பதும் சிக்கல்களும் பிணக்குகளும் இடைக்கிடை ஏற்படவே செய்யும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் அதிகம் பாதிப்புறும். எனினும் ஆயுதம் இயந்திர சாதனங்கள் - மருந்து இரசாயனப் பொருள் வியாபாரிகள் லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புக்கள் கூடும். கடமைகளைச் செய்வதில் தடைகளும் கட்டுப்பாடுகளும் அதிகரிக்கும், சகஊழியர்களின் ஒத்துழைப்பும் குறைவுறும்.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவுகள் உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். பண்ணை விவசாயிகளுக்கு கூலியாட்கள் பிரச்சினைகளைக் கொடுப்பார்கள். சந்தைவாய்ப்பும் பெரிதும் குறையும்.

தொழிலாளர் மத்தியில் அமைதியின்மை ஏற்படும். வேலைவாய்ப்பும் குறைவுறும், நாட்கூலி வேலையாட்கள் பெரிதும் பாதிப்புறுவர். வருமானம் பெருமளவில் வீழ்ச்சியுறும்.

மாணவர் கல்வியூக்கம் குறையும். மாணவர் மத்தியில் மறதியும், அதிருப்தியும் கல்விமுன்னேற்றத்துக்குத் தடையாகிவிடும். ஆசிரியர் - மாணவர் கருத்து வேற்றுமைகள் வலுப்பெறும்.

பெண்களுக்குச் சோதனைக்குமேல் சோதனைகள் ஏற்படும். விவாகமுயற்சிகளில் சிக்கல்கள் அல்லது தோல்வியில் முடிவுறுதுநீளும். குடும்பப் பெண்களுக்குப் பொறுமைக்கும் நேர்மைக்கும் பரீட்சைக்காலமாகவும் அமையலாம்.

அதிஷ்டநாட்கள், செப் 17,18,22,26,27
அக் 5 இரவு 6, 7, 15
துரதிஷ்டநாட்கள்: செப் 28,29,30பகல்
அக் 3,4,5பகல்,13



# விருச்சிகம்

விசாகம் 4 ம் கால் அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 11ல் சுவர்ண மூர்த்தியாகிப் பலம்பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு சுகம் சீராக இருக்கும், பொருள் வருமானமும் திருப்திதரும். ஆனல் சனிபகவானும் குருவும் குரூரகோசாரம் செய்தலின் மேற்கூறிய பலன்களில் தடைகள் ஏற்படவே செய்யும். உடல்நலக்குறைவு குடும்பநலக்குறைவு அலைச்சல் முதலான தீயபலன்களும் கலந்து நிகழலாம்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பத்தின் பிணி பீடைகள் கவலைதரும். புத்திரர் உதவிகளுக்குப் பதில்வேதனைச் சம்பவங்களே தொடரும். குடும்ப வருமானம் குடும்பச்செலவுகளுக்கு ஈடுசெய்யமுடியாதவாறு பெரிதும் பாதிப்புறும்.

வர்த்தகர்கட்கு வியாபார முன்னேற்றம் பெரிதும் குன்றும். பங்குமுதலீடுகளில் நட்டம் ஏற்படும். வங்கி நிதி உதவிகள் கிடையாது. கறுப்புச்சந்தை வியாபாரிகட்கு ஆபத்தானகாலம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் பதவிச்சிறப்பும் ஒருங்கே கிடைக்கும். ஆனல் சகஊழியர் மத்தியில் ஒத்துழைப்பின்மையும் பொருமையும் வளரும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் கவலைதரும். கூலியாட்களின் கெடுபிடிகள் பயிர்உற்பத்தியைப் பெரிதும் குறைவடையச் செய்யும். பண்ணை விவசாயம் நட்டம்தரும்.

தொழிலாளருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் தாங்கொணுத்துன்பம் தரும். தொழில் பிணக்குகள் அதிகரிக்கும். தொழிலாளர் வருமானம் பெரிதும் பாதிப்புறும்.

மாணவர் கல்வித்தடைகளுக்கான காரணிகளே அதிகம் ஏற்படும். ஆனுல் மாணவர் மத்தியில் சுயமுயற்சியும் கல்வி ஊக்கமும் வளர்ச்சியடையும். மருத்துவம் - பொறியியல்துறைக் கல்வி மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகளில் தடைதாமதங்களே நீடிக்கும். காதல் விவகாரங்கள் ஏமாற்றத்தையும் அவமானத்தையும் தரக்கூடும். குடும்ப பாரம் குடும்பப்பெண்களுக்குப் பெரும் தடையாகவும் கூடும்.

அதிஷ்டநாட்கள், செப் 19,20,24,25,28,29
அக் 8,9,16பி.ப

துரதிஷ்டநாட்கள்: செப் 17,18,30இரவு
அக் 1,2,5 இரவு 6,7,15



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 10ல் தாம்ரமூர்த்தியாகி சஞ்சாரம் செய்வது அதிகம் நன்மைதரமாட்டாது. ஏரரைச்சனியின் துர்க்கோசாரம் சேர்ந்து நிகழ்கின்றது. பொதுவாக இவர்களுக்கு உடல்- உளப் பாதிப்புக்கள் அடிக்கடி ஏற்படும். பொருள்வருமானத்தை அநாவசியச் செலவுகளால் அழிப்பர். அந்நியதேச சஞ்சாரம், நண்மைகளேயும் காரணமில்லாமல் பகைத்தல் போன்றவற்றுல் அவதிப்பட்டாலும் ஆச்சரியமில்லை. எவ்வாறுயினும் குரு 3ல் சுப கோசரசஞ்சாரம் செய்தலின் எவ்வகை இடர்வரினும் சமயோசிதமாகச் சமாளித்தும் விடுவார்கள்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப சுகம் பாதிப்புறும். குடும்பத்தில் தேவையற்ற ஆனுல் தவிர்க்க முடியாத செலவுகள் அடிக்கடி ஏற்படும். பெரியவர்களின் ஆசியும் உதவியும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். புது முதலீடுகள் செய்ய வாய்ப்பான காலம். அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளுடன் பழகுவது நெருப்புடன் நெருங்குவது போன்ற நிலை ஏற்படும். சிலருக்கு வேலை நீக்கம் அல்லது பதவி இறக்கம்கூட நிகழும். சகஉத்தியோகத்தரின் ஆதரவும் ஒத்துழைப்பும் குறைவுறும்.

விவசாயிகளுக்குப் பசளை அரசமானியம் முதலானவை உரியகாலத்தில் கிடையாமையால் பயிர் வளர்ச்சியும் விளைவும் குறைவுறும், சந்தைவாய்ப்பும் குறையும்.

தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு வேலையில்லாத்திண்டாட்டம் என்பன ஏற்படக்கூடும். தொழில் ஒப்பந்தங்கள் அலைச்சல் மூலம் பலன் தரும். தொழிற் பிணக்குகளும் அதிகரிக்கும்.

மாணவர்கள் கல்வியூக்கமும் கல்வித் தேர்ச்சியும் முன்னேற்றம் காணும். ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்லுறவு வளரும். சட்டத்துறை மாணவர் கல்வித்தேர்ச்சி பெறுவர்.

பெண்களுக்கு மனம்போல் எண்ணங்கள் நிறைவேறும். காதல் விவகாரங்கள் விவாகசித்தியையும் கொடுக்கும். குடும்பப் பெண்களுக்கு குடும்பசுகமும் குடும்ப அமைதியும் ஆறுதல்தரும்.

அதிஷ்ட நாட்கள், செப் 17,18,21,22,26,27.
அக் 1,2,11,15,16.

துரதிஷ்ட நாட்கள், செப் 19,20,21.
அக் 3,4,5,8,9,10.



## மகரம்

உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2,

மகரராசியில் ஜெனனமானவர்களுக்கு சூரியபகவான் இம்மாதம் 9ல் ரஜதமூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்வதும் குருபகவான் ஜென்மத்திலும் செவ்வாய் அட்டமத்திலும் சஞ்சாரம் செய்வதும், தீமைகளுடன் கூடிய சம சுப பலன்களையே அதிகம் எதிர்பார்க்க வேண்டும். பெரும்பாலும் இவர்களின் உடல்நலம் அடிக்கடி பாதிப்புறலாம். குடும்பத்தில் துக்க சம்பவங்கள் கூட இடம்பெறும். வருமானத்திலும் செலவுகள்

ஏறிக்கொண்டு போதலால் கடன்பயமும் இவர்களுக்கு ஏற்படலாம்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பத்தில் பிணி பீடைகள், சச்சரவுகள், பிணக்குகள் முதலானவை அடிக்கடி ஏற்பட இடமுண்டு. குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் உதவிகள் கிடையாது.

வர்த்தகர்களின் முதலீடுகளில் வருமானம் பெருமளவில் வீழ்ச்சியடையும். ஆத்திரமும் அவசர புத்தியும் வாடிக்கையாளரின் வருகையைப் பெருமளவில் குறைக்கும். கூடியவரை புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளால் வேலைப்பொறுப்புக்கள் அதிகம் சுமத்தப்படும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் குறையும். சிலருக்குப் பதவியிறக்கம் அல்லது பதவி நீக்கம் கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி பெருகும். பண்ணை விவசாயிகளுக்குக் கூலியாட்கள் ஒத்துழைப்பும் கிடைக்கும். பசளை - மானிய உதவிகள் கிடைப்பதில் தடை தாமதங்கள் ஏற்படும்.

தொழிலாளர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் குறைவுறும். வேலை வாய்ப்புகள் கிடைத்தாலும் ஊதியக்குறைவும் ஏற்படும். தொழில் ஒப்பந்தங்கள் எதிர்பார்த்த லாபம் தராது.

மாணவர் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் அடிக்கடி ஏற்படும். மாணவர் மத்தியில் மன அமைதியின்மையும் மறதியுமாகிய குணங்கள் அதிகரிக்கும். கல்வித் தேர்ச்சியும் குறிப்பிடக்கூடிய திருப்தி தரமாட்டாது.

பெண்களுக்கு வாழ்க்கையில் பலவித வேதனைச் சூழ்நிலைகளைத் தாங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படும். விவாகப் பேச்சுக்கள் காலவரையறையின்றி நீளும். குடும்பப் பெண்களின் குடும்ப பாரமும் அதிகரிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 19,20,24.25,28,29,30,
அக் 3,4,5,13,16.

துரதிஷ்ட நாட்கள்: செப் 21, 22, 23
அக் 5,6,7,11,



# கும்பம்

அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்ப இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் அட்டமத்தில் லோக மூர்த்தியாகி இருவகைப் பெலமுமின்றிப் பவனி வருவது இவர்களின் துரதிஷ்டமே. மற்றும் பிரதான கிரகங்களான குரு-சனி-செவ்வாய் கேது முதலானவர்களும் துர்க்கோசாரம் செய்வதும் நன்மைகளிலும் பார்க்கத் தீயபலன்களையே அதிகம் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. பொதுவாக இவர்களுக்கு உடல் - உளப் பாதிப்புக்கள் - பொருள் நட்டம், குடும்பத்தில் துக்க சம்பவங்கள், பதவி இழப்பு, அவமானம் முதலான பலன்களே அதிகம் நிகழும்.

குடும்பத்தில் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள், பிணக்குகள், பிரிவுகள் ஏற்படும். குடும்ப சுகவீனம் அடிக்கடி தொல்லை தரும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிப்பதால் கடன் பழு ஏறிக்கொண்டே செல்லும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரக்குறைவே இந்த மாதமும் தொடரும். முதலீடுகளால் எதிர்பார்த்த லாபங்களுக்குப் பதில் நட்டமே கிடைக்கும். கூடியவரை புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் மத்தியில் "ஆப்பிழுக்கப் போன குரங்கு" கதைபோல் அவஸ்தைப்பட வேண்டியும் வரும். பதவியுயர்ச்சிக்குப் பதில் பதவியிறக்கம் அல்லது பதவி நீக்கமும் சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செழிப்பு உண்டாகும். ஆனால் விளைவு எதிர்பார்த்த அளவு கிடையாது. பண்ணை விவசாயத்திலும் செலவுகள் அதிகரிக்கும்,

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைவுறும். சிலருக்கு வேலைநீக்கம் கூடக் கிடைக்கலாம். அன்றாடத் தொழிலாளர் மாதத்தில் பெரும் பகுதியை வேலையின்றிக் கழிக்க நேரும். தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும்.


மாணவர் கல்வி வளர்ச்சிக்குப் பாதகமான காரணிகளே கல்விச்சாலைகளில் முன்னுக்கு நிற்

கும். ஆசிரியர் மாணவர் நல்லுறவுகள் சீர்கெடும். விரக்தி மனப்பான்மையும் மறதியும் மாணவர் கல்வித் தேர்ச்சிகளுக்குத் தடையாக நிற்கும்.

பெண்களுக்குப் பலப்பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய தாக்கங்கள் ஏற்படும். கன்னிப் பெண்களின் விவாகம் - காதல் முயற்சிகள் பெரும்பாலும் பிரதிகூலமாகி வரும். வேலை செய்யும் பெண்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 17,18,21,22,26,27,
அக் 1,2,5,6,7.

துரதிஷ்ட நாட்கள்: செப் 23, 24, 25,
அக் 8,9,10,13.



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீன இராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரிய பகவான் 7-ல் தாம்பர மூர்த்தியாகிச் சம பலத்துடன் சஞ்சாரம் செய்வது ஓரளவு நன்மை தரும். இராசி அதிபதி குரு லாபத்தில் சுப கோசாரம் செய்வதும் நன்மையாகும். சமசுகம், குடும்பச் சிறப்பு, எதிர்பாராத பொருள் வரவு, காரிய வெற்றி, பெரியோர் உதவி, இராசாங்க நன்மை, வீடு வாகனச்சிறப்பு முதலான சுப பலன்களே அதிகம் நிகழும். எனினும் அந்நியர் தொல்லை, பொருள் நட்டம், காரியத்தடை தாமதம், முதலான துர்ப்பலன்களும் இடையிடையே நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப வருமானம் திருப்தி தரும் குடும்பத்தில் அமைதியும், அன்பும் ஆரோக்கியமும் நிலவும். புத்திரரால் ஆறுதல் கிடைக்கும்.

வர்த்தகர்களின் முதலீடுகள் இலாபம் தரத் தொடங்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். வங்கியில் நிதி உதவிகள் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலும் பொறுப்புகள் அதிகாரிகளால் சுமத்தப்படும். சக உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் பதவியுயர்ச்சிக்குச் சமமான பாராட்டுகளும் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி சம முன்னேற்றம் பெறும். வங்கி - மானியம் - பசளை முதலிய உதவிகள் கிடைக்கும். விளைபொருள்களுக்கு நற்சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக்கள் கணிசமான அளவு கிடைக்கும். முதலாளிகள் அல்லது வேலை கொள்வோருக்கும் தொழிலாளருக்குமிடையில் ஒற்றுமையுண்டாகும். ஒப்பந்த வேலைகளும் லாபம் தரும்.

மாணவர் கல்வித்தரம் உயரும்; கல்வி ஊக்கமும், அக்கறையும், ஆர்வமும் மாணவர் மத்தியில் ஏற்படும். ஆசிரியர் - மாணவர் நல்லுறவும் வளரும். கல்வித் தேர்ச்சியும் திருப்தி தரும்.

பெண்களுக்கு எண்ணங்கள் சிரமங்களின்றி நிறைவுறுவதற்கு ஏற்ற காலம். கன்னிப் பெண்கள் காதல் முயற்சிகளில் வெற்றி பெறுவர். விவாக முயற்சிகளும் சில தடை தாமதங்களின் மேல் கைகூடும். வேலை செய்வோருக்கு மனப்பூர்வமான ஆறுதல் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 19,20,24,25,28,29,
அக் 3,4,5,8,9,

துரதிஷ்டநாட்கள்: செப் 17,18,26,27,
அக் 11, 12, 14.

---

## செல்லப்பிள்ளை

ராகம்—கல்யாணி — 'கோப்பாய்—சிவம்'

பல்லவி

உனக்கென்ன நீஒரு செல்லப்பிள்ளை — உன்னை
உபசரிப் பார்தமக்கோர் எல்லையில்லை — முருகா
[உனக்]

அநுபல்லவி

தினைத்ததை முடித்துவைப்பாள் பார்வதியே - அங்கு
நீசொன்னால் மறுபேச்சு யார்உரைப்பார் — முருகா
[உனக்]

சரணம்

தேவியிருவர் உன்னைச் சேர்ந்திருப்பார் — முருகா
தேவைகளே உனது நினைவில்வரும்
பாவிஎன் பாடல்எல்லாம் உன்செவியில் - வந்தே
பக்குவ மாய்விழுமோ நான்அறியேன் - முருகா
[உனக்]

# பிரார்த்தனைகளும் குழந்தைப்பேறும்

ஆடி இதழ் தொடர்ச்சி

ஜெனன ஜாதகம் வருமாறு:

<table>
<tr><td>சூரி 28 53<br>XI 23 31<br>சுக் 22 55<br>பு(வ) 22 54</td><td>XII 26 24</td><td>I 27 57<br>ராகு 23 34<br>குரு 4 35</td><td>II 23 13</td></tr>
<tr><td>X 20 33<br>சனி 19 38</td><td rowspan="2" colspan="2">12-4-1965<br>பருத்தித்துறை<br>பிறந்த நேரம்:<br>காலை 9-47-35 மணி<br>அயனம்சம்: 23 10</td><td>III 21 22</td></tr>
<tr><td>IX 21 22</td><td>சந் 10 23<br>செவ் 15 56<br>யுரே 18 06<br>IV 20 33</td></tr>
<tr><td>VIII 23 13</td><td>கே 23 34<br>VII 27 57</td><td>VI 26 24<br>செ 26 35</td><td>V 23 31</td></tr>
</table>

ஜனனத்தின்போது நின்ற தசை:- கேது 1 வருடம் 6 மாதம் 18 நாள்.

சுக்கிர தசை புதன் புத்தி 1982-10-30 இல் தொடக்கம் 1985-8-30 வரையும் நடைபெறும்:

| கிரகங்கள் | நட்சத்திராதிபதி | உபநட்சத்திராதிபதி |
|---|---|---|
| சூரியன்: | புதன் | சனி |
| சனி: | கேது | சனி |
| செவ்வாய்(வ): | சுக்கிரன் | சூரியன் |
| புதன்(வ) | புதன் | சந்திரன் |
| குரு: | சூரியன் | சனி |
| சுக்கிரன்: | புதன் | சந்திரன் |
| சனி: | இராகு | செவ்வாய் |
| ராகு: | செவ்வாய் | செவ்வாய் |
| கேது: | புதன் | செவ்வாய் |
| யுரேனஸ்: | சுக்கிரன் | செவ்வாய் |
| நெப்ரியூன், | குரு | கேது |

* புதனும் சுக்கிரனும் ஒரேவிதமான பலனைக் கொடுப்பார்கள். இவர்கள் 11-ம் முனையில் நிற்பதாகக் கருதலாம்.

2-ம் முனை குரு சாரம் சனி உபநட்சத்திரம்
5-ம்முனை செவ். சாரம் செவ். உபநட்சத்திரம்
11-ம்முனை புதன் சாரம் செவ். உபநட்சத்திரம்

5-ம் முனை புதனுக்குரிய கன்னி இராசியில் செவ்வாய் சாரம் செவ்வாய் உபநட்சத்திரத்தில் அமைகிறது. உப நட்சத்திராதிப்தி செவ்வாய் 3-ம் பாவத்தில் சுக்கிரசாரம் சூரிய உபநட்சத்திரத்தில் நிற்கின்றுன். சுக்கிரன் 11-ம் முனையிலும் சூரியன் 11-ல் நிற்கிருன். இதனுல் சாதகிக்கு குழந்தைப் பாக்கியம் உறுதியாகின்றது.

11-ம் பாவமுனை குருவுக்குரிய மீன ராசியில் புதன் சாரம் செவ்வாய் உப நட்சத்திரத்தில் அமைகிறது. உப நட்சத்திராதிபதி செவ்வாயைப் பற்றி முன்பு ஆராய்ந்தோம். இதனுல் சாதகிக்கு குழந்தை இன்பமும் உறுதியாகின்றது.

செவ்வாய் இரு பாவமுனைகளின் உப நட்சத்திராதிபதியாக அமைவதால் குழந்தைப் பாக்கியத்தில் சில கஷ்டங்களைச் சாதகி அனுபவித்தல் வேண்டும்.

குழந்தை பிறக்கும் காலத்தைத் தீர்மானிப்பதற்கு 2-ம், 5-ம், 11-ம் வீடுகளை ஆராய்தல் வேண்டும்.

2-ம் வீடு மேலதிக நபர் குடும்பத்திற்கு வருவதையும் 5-ம் வீடு குழந்தையையும், 11-ம் வீடு இவைகளால் கிடைக்கும் இன்பத்தையும் குறிக்கும். உண்மையில் ஒரு குழந்தைப்பேறு உண்டானுல் மேற்கூறிய வீடுகளின் பலன்களும் உண்டாகும்.

அடுத்து இம்மூன்று வீடுகளின் குறிகாட்டிகளை பின்வருமாறு குறிப்பிடுதல் வேண்டும்.

(1) 2ம், 5ம், 11-ம் பாவங்களில் (வீடுகளில்) நின்ற கிரகங்களின் நட்சத்திரங்களில் நின்ற கிரகங்கள்.

(2) 2ம், 5ம், 11-ம் பாவங்களில் நின்ற கிரகங்கள்.

(3) 2ம், 5ம், 11-ம் வீட்டதிபதிகளின் நட்சத்திரங்களில் நின்ற கிரகங்கள்.

(4) 2ம், 5ம், 11-ம் வீட்டதிபதிகள்.

(5) மேற்கூறிய குறிகாட்டிகளுடன் ஒன்று சேரும் கிரகங்கள்.

(6) மேற்கூறிய குறிகாட்டிகளில் பார்வையைப் பெறும் கிரகங்கள்.

இதன்படி பின்வரும் கிரகங்கள் குறிகாட்டியாக அமைகின்றன.

| நியதி | 2-ம் விடு | 5-ம் விடு | 11-ம் விடு |
|---|---|---|---|
| 1 | — | — | சூரி, புத, சுக்: கேது, செவ். |
| 2 | — | — | சூரி, புத, சுக். |
| 3 | சூரி, புத சுக், கேது | சூரி, புத சுக், கேது | — |
| 4 | புதன் | புதன் | குரு |
| 5 | — | — | சந்திரன் |
| 6 | — | — | இராகு, சனி |

இதனால் மேற்கூறிய ஒன்பது கிரகங்களும் குறிகாட்டிகளாகும். இவைகளில் வலிமையானவைகளைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

2-ம், 5-ம், வீடுகளின் அதிபதி புதன் 11-ம் வீட்டு ஆரம்பமுனையில் நிற்பின் அவனுடன் தழுவிய நிலையில் சுக்கிரன் நிற்கிறான். 2-ம் வீட்டு ஆரம்பமுனையில் ஆதிக்கம் செலுத்தும் சூரியன் 11ல் நிற்கிறான். 11-ம் வீட்டதிபதியாகிய குரு 5-ம் வீட்டைப் பார்க்கிறான். இதனால் சுக்கிரன் புதன், சூரியன், குரு முதலியோர் வலிமையானவர்கள்.

மேற்கூறிய புதன், சுக்கிரன், சூரியன் முதலிய கிரகங்களுடன் 11-ம் வீட்டையும் செவ்வாய் பார்க்கின்றான். எனவே சூரியன், புதன், சுக்கிரன், குரு, செவ்வாய் யாவும் பயனுள்ள குறிகாட்டிகளாம்.

செவ்வாயின் இராசியில் கேது நிற்பதால் கேதுவையும், சுக்கிரன் இராசியில் இராகு நிற்பதால் இராகுவையும் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

5-ம் முனையில் இராகுவும் கேதுவும் ஆதிக்கம் செலுத்துவதால் இவர்களும் வலிமையடைகின்றார்கள். இதனால் சூரியன், புதன், சுக்கிரன், குரு, செவ்வாய், கேது, ராகு யாவும் பயனுள்ள குறிகாட்டிகளாம்.

இப்போது சுக்கிரதசை புதன் புத்தி அடுத்து கேது புத்தி. எனவே சுக்கிரன் தசை கேதுபுத்தி செவ்வாய் அல்லது இராகு அந்தரத்தில் குழந்தையை எதிர்பார்க்கலாம். 5-ம் 11-ம் முனைகளின் உபநட்சத்திராதிபன் செவ்வாயாக அமைவதாலும் 11-ம் முனையை செவ்வாய் பார்ப்பதாலும் செவ்வாய் அந்தரத்தில் குழந்தை கிடைத்தல் வேண்டும். இதுதான் எனது கணிப்பு. சுக்கிர தசை, கேது புத்தி, செவ்வாய் அந்தரம் 1986-1-30-ம் திகதி தொடக்கம் 1986-2-25-ம் திகதி வரையும் நடைபெறும்.

சாதகியும் அவருடன் வந்தவர்களும் நன்றி செலுத்திக்கொண்டே விடைபெற்றார்கள்.

---

## விவாகம் எப்போது?

இ. கந்தையா, கரம்பன்.

1. இலக்கின பாவாதிபனுடைய ஸ்புடத்தையும், 7-ம் பாவாதிபனுடைய ஸ்புடத்தையும் கூட்ட வருகின்ற ஸ்புடத்தில் கோசாரத்தில் குரு சஞ்சாரம் செய்யுங்காலத்தில் ஜாதகனுக்கு விவாக சித்திகிட்டலாம்.

உதாரணம்: இலக்கின பாவாதிபதி சுக்கிரன் ஸ்புடம் ராசி 6, பாகை 24, கலை 32 உடன், 7-ம் பாவாதிபதி செவ்வாய் ஸ்புடம் ராசி 6, பாகை26 கலை 30 ஐக் கூட்ட இராசி 1, பாகை 21, கலை 2 என வருதலால் கோசரத்தில் குரு இடபராசியில் 21 பாகை, 2 கலையில் சஞ்சாரம் செய்யும்போது சாதகனுக்கு விவாகசித்தி ஏற்படலாம்.

2. சந்திரன் இருந்த இராசி அதிபதியினுடைய ஸ்புடத்தையும் சந்திரனுக்கு 7-ம் ராசி அதிபனுடைய ஸ்புடத்தையும் கூட்டவருகின்ற ஸ்புடத்தில் கோசரத்தில் குரு வரும்போது சாதகனுக்கு விவாகம் நிகழும்.

உதாரணம்: சந்திரன் இருந்த இராசி அதிபன் சந்திரன் ஸ்புடம் ராசி 3, பாகை28, கலை10 ஐயும் 7-ம்அதிபன் சனிஸ்புடம் ராசி7, பாகை20 கலை 27ஐயும் கூட்ட இராசி 11 பாகை 18, கலை37 என வருதலால் மீனராசியில் 18 பாகை, 37 கலையில் குருசஞ்சாரம் செய்யும்போது ஜாதகனுக்கு விவாகம் நிகழும்.

இந்த இரண்டாம் விதி விசேடமானது.

---

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## எண் - 8 சனீஸ்வரன்

சென்ற இதழ் தொடர்ச்சி

**பெயர் எண்கள் கூட்டு எண்களினால் வரும் பலன்கள் (இயக்கம்)**

**17-ம் எண்:-** அரசாங்கப் பதவிகட்காகவோ தலைமைப் பதவிகளுக்காகவோ போராடியபடி இருப்பார்கள். எதிலும் தலைமைப்பதவி இல்லாவிடில் பெருந்தன்மையாக ஒதுங்கிவிடுவார்கள். அசுரகுருவான வெள்ளிக் கிரகத்தின் ஆதிக்கபலமும் கலந்து தொழிற்படுவதால் எதிலும் தைரியமாக எதிர்த்துப் போராடுதல், வெற்றி, தோல்வி அடைதல் சகஜமாக இருக்கும். தோல்வியே வெற்றியின் முதற்படி என்பது இவர்களின் தாரக மந்திரமாகும், உலகில் அதிகார சுகபோகவாழ்வை நாடி இருப்பர். பிடிவாதம், ஒருவர் செய்த உதவிக்கு செய்நன்றி மறவாது பிரதியுபகாரம் செய்தல், ஞாபகசக்தி, தர்மம் செய்தல், புகழுக்காக அதிக பொருளைச் செலவுசெய்தல் என்பன இவர்களது தன்மைகளாகும். ஜனவசீகரமானவர்கள். 40 வயதிற்குமேல் சக்தி, புத்தி, யுத்தி தொழிற்படும், இவர்கள் கையசைத்தால் ஓடிவருவதற்கு பலர் இருப்பார்கள். இவர்களைப் பார்ப்பதே புண்ணியம் எனக் கருதுவார்கள். தெய்வீகத் தன்மை பிரகாசிக்கும் சமயசாஸ்திரங்களுக்கு மதிப்பளித்து நடப்பார்கள். அரசியல், வியாபாரம், கமிஷன் வியாபாரம், தொழில் நுட்பம், தலைமைப் பதவிகள் போர்ப்படை, பொலிஸ்படை, என்பவற்றிலும் தீவிரமாக முன்னேறுவர். தனது எதிரிகளை மறைமுகமாக பழிவாங்கி அழித்துவிடவோ தோல்வியுறவோ செய்துவிடுவார்கள். இச்செயலால் பாவசக்தி அதிகரிக்கும். சிலர் பரிதாபத்துக்கு உரியவர்களாக காலம் கழிக்கின்றார்கள். இவர்களது மனைவியும் அல்லது கணவனும் தெய்வ பக்தி உடையவர்களாக நம்பிக்கைக்கு உரியவர்களாக நிட்சயம் இருப்பாள். மனஉறுதி, அனுபவமே இவர்களை முழு மனிதனாக்கும் என்பதில் ஐயமில்லை.

**26-ம் எண்:-** தொழில்நுட்பம், வேதாந்தம், புராண இதிகாச தொடர்பிருக்கும். எதையும் தைரியத்துடன் போராடிப் போராடி சாதிப்பார்கள். அமைதியற்ற வாழ்வு எதிலும் திருப்தி ஏற்படாத தன்மை இருக்கும். விதிவசப்பட்ட கொடிய சம்பவங்கள் இவர்கள் வாழ்விலோ குடும்பத்தவர்களுக்கோ நடக்கும். தாம் உழைப்பதை குடும்பத்திற்காகவே செலவு செய்தபடி இருப்பர். குடும்பப் பாசம் உடையவர்கள். எந்த விசயத்திலும் கலகத்தைப் பிறப்பித்து நியாயத்தை காண முற்படுவார்கள், பிறந்த வீட்டிலே தாயாருடன் வறுமையில் போராட்டம் இருக்கும். வாழவந்த மனைவியால் சோதனையும் அதிக வைத்தியச் செலவால் வேதனையும் கூடிவரும். நண்பர்கள் தக்கசமயத்தில் குழிபறித்துவிடுவார்கள். அதனால் ஆத்திரப்படுவர். வாழ்வில் பெற்ற அனுபவ ஞானத்தால் அனுபவசாலிகளாவர். 40 வயதிற்குப் பின்பு ஓரளவு அமைதி பொருளாதாரவளம் தலைமைப்பதவிகள் தேடிவரும்.

**35-ம் எண்:-** பலத்த போராட்டமான எண் ஆகும். சோம்பேறித்தனம் இந்த எண்காரர்களுடன் ஒட்டிப் பிறந்திருக்கும். எதற்கும் குறை குற்றம் சொல்லிக்கொண்டிருப்பார்கள். கலியாணத்தரகு தூது வேலை என்பவற்றில் பேசிப் பேசிப் பொழுதைப் போக்குவார்கள். கஷ்டப்பட்டுத் தேடும் பொருளை செலவுசெய்து விடுவார்கள். சேமிப்பிருக்காது. பிறருக்கு கொடுத்துவிட்டு சண்டை அல்லது வழக்குவரை செல்வார்கள். 35 வயதுமட்டும் திடமற்ற மனோநிலையிருக்கும். மலச்சிக்கல் இரத்த சம்பந்தமான நோய்களால்

வருந்துவார்கள். நெருங்கிய நண்பரால் குற்றவாளிகளாக்கப்படவோ சிறை செல்லவோ நேரிடும். தெய்வகாரியங்கள் மருந்து, இரும்பு, சட்டம், கமிஷன் என்பன தொழிலிடமாக இருந்தால் அதிக வருமானம் கிடைக்கும். அல்லது அத்தொழிலை செய்வதால் சிறப்படைவார்கள். பாம்பு ஏணிபோன்று திடீரென மேல்கீழ்நிலைகளை அடைவார்கள். தெய்வீகம், மருந்து, இரும்பு சேமிப்புப் பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

44-ம் எண்:- சட்டவிரோதமான தொழில் செய்வதில் கெட்டிக்காரர். மனம் அடிக்கடி யாரை யாவது ஏமாற்றி உழைக்கலாமா எனச் சிந்திக்கும். வெளிப்பார்வைக்கு யோக்கியர், சீர்திருத்தவாதிகள், தர்மசீலர்களாகத் தோன்றி தமது பேச்சாலும், நடிப்பாலும் மற்றவர்களை ஏமாற்றி விடுவார்கள். எந்தப்பதவியையாவது, எவ்வளவு பணத்தையாவது பெறுவதும் இழந்துவிடுவதுமாக இருப்பார்கள். அரசாங்க குற்றவாளியாக அல்லது குற்றவாளிகள் நிறைந்த இடத்தில் அதிகாரிகளாக இருப்பார்கள். இவரின் பலவீனத்தை நன்கு அறிந்த மனைவி இவரைப்பயமுறுத்தி வைப்பாள். எவருக்குமே பயப்படாது துச்சமாக செயற்படும் இவர் மனைவியின் ஒருசொல் கேட்டால் போதும் ஐம்புலன்களும் அடங்கிவிடும். சனியன் வதைக்கிறுளே என மனதுக்குள் திட்டுவார்கள். வெளியில் சொல்லமாட்டார்கள். குழந்தைகள் என்றால் உருகிவிடுவர். இறைவனுக்கு முன்னுல் இறைவா நான் செய்வது பிழை ஒருவழியுமறியாது செய்கின்றேன் என்னை மன்னித்துவிடு என மன்றுடுவார்கள். பெயர்பெற்ற கொலை, கொள்ளை இவர்களால் செய்யப்பட்டிருக்கும். மனவருத்தம் உடல் நோயைத்தீர்க்க இறைவழிபாடு முக்கியம். பங்கு வியாபாரம், இயந்திரம், வைத்தியதொழில் என்பவற்றில் சிறப்படையலாம். இவர்கள் முக்கியமாக தமது பெயர்களை தமது பிறந்த கூட்டு எண்களுக்குச் சாதகமான முறையில் வைத்துக்கொள்வது முக்கியமானதாகும். வியாபாரம் கள்ளக்கடத்தல் வட்டி, போக்குவரத்து ஏற்றுமதி இறக்குமதி கடல் தொடர்பான தொழில் குதிரைப் பந்தயம் சட்டத்துக்கு மாருன தொழில்களையும் செய்து அடிக்கடி அகப்பட்டுக் கொள்வர்.

53-ம் எண்:- துணிவு மிக்கவர்கள். பலத்த போராட்டம் இருக்கும். எதையும் எடுத்தெறிந்து பேசுவார்கள். தான் வைத்ததுதான் சட்டம் என்றிருப்பர். சமுதாயத்தில் இவர்களுக்கு ஓர் தனியிடம் இருக்கும். நல்லதோ கெட்டதோ பெயர் பரவியபடி இருக்கும். தொழில்நுட்பம், உற்பத்தித் தொழில்கள் இரும்பு வைத்தியத்துறை என்பவற்றில் ஈடுபட்டால் நல்ல வெற்றிகிடைக்கும். ஆரம்பத்தில் நிச்சயமற்ற நிலையிலிருந்து வயது ஏற ஏற நிதானம் இருக்கும். திடீர் ஆபத்து, அவமானங்கள், இழப்புக்கள் ஏற்படும். தமது தொழிலில் ஊக்கத்துடனிருந்து பெரும் பொருளீட்டுவார்கள். இவருக்கு நண்பர்களாலோ மனைவியின் ஆறுதலாலோ தொழில் சிறப்படையும். நிதான முன்னேற்றம் ஏற்பட்டு படிப்படியாகச் சிறப்படைவர். அவசரம் கூடாது.

62-ம் எண்:- திட்டம் தீட்டுவதில் கெட்டிக்காரர். பிறருக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குவார்கள். இரவு 12 மணிக்குப்பின்பே இவர்களது கற்பனை வளம் பெருகும். தமது தொழிலை அதன் இரகசியம் இலாபம் பெறும் வழிகளைக் கண்டு பிடிப்பார்கள். கவிதை துறையில் தொழில் செய்வோராகவும் தொழிற்சாலை அதிபதிகளாகவும் கல்விச் சிறப்புடையவர்களாகவும் சமயப்போதனையாளர்களாகவும், சிறந்த சட்டவாதிகளாகவும் இருக்கின்றூர்கள். இவரை எவராலும் அடக்க முடியாது. கலகம் பிறப்பித்து அதற்கு காரண காரியங்களுடன் நியாயம்தேட முற்படுவார்கள். நண்பர்களாலும் பெண்களாலும் மன ஆறுதல் அடைவார்கள்.

71-ம் எண்:- ஜனவசீகரமான எண். தெய்வீகத்தன்மை உள்ளவராகவும் பாவமன்னிப்புத் தரும் புனிதர்களாகவும் இருப்பார்கள். ஊற்றுக் கிணறு போலவும் ஆலம் விருட்சம் போன்றும் பிறர் பயன்படத்தக்க வாழவைக்கக்கூடிய நல்ல அறிவுரைகளைக் கருத்துக்களை சொல்லுவார்கள். எல்லோரிடத்திலும் அன்பாகவும், பண்பாகவும், கௌரவமாகவும் நடந்துகொள்வார்கள். மதத் தொடர்பான காரியங்களைச் செய்தலையும் சமாதானத் தூது விடுவதாயும் எடுத்துக் காட்டுகின்றது. அன்னப்பட்சி போன்று (நீரிலிருந்து பாலை வேருக்குப் போன்று) எல்லா நூல்களையும் கற்றுக் கற்று தெளிந்தபடி இருப்பார்கள். தம்மைத்தேடி வருபவர்களுக்கு உணவு, உடை, பொருள் கொடுத்துக் காப்பார்கள். இறுதிவாழ்வு அமைதியானதாகவும், தெய்வமாக எல்லோரும் வணங்கக்கூடியதாகவும் இருக்கும்.

# வக்கிர கதியும் கிரக பலாபலனும்

வி. எஸ். வேலாயுதன், துறைநீலாவணை. (கி.மா.)

சூரிய மண்டலமானது சூரியன் முதலிய நவக் கிரகங்களையும் தன்னகத்தே கொண்டதாகும். இங்கு சூரியனே தலைமைக் கிரகமாகக் கருதப்படுகின்றார்: வான வீதியில் சூரியனைத் தொடர்ந்து ஏனைய கிரகங்களும் ஒரு வட்டப் பாதையில் (Orbit) வலம் வந்த வண்ணம் இருக்கின்றன: நாம் அறிந்தோ அறியாமலோ இந்த நியம ஒழுங்கு சதா நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது: இங்ஙனம் கிரகங்கள் சஞ்சாரம் செய்யும்போது அவற்றின் சஞ்சார கதியில் எத்தகைய பின்னடைவும் ஏற்படுவதில்லை. சில சமயங்களில் பூமியில் இருந்து கிரகங்களின் சஞ்சார கதியை அவதானிப்போருக்குக் கிரகங்களுள் ஒன்றோ சிலவோ வெவ்வேறு இடங்களில் தோற்றமளிப்பதாகவே தெரிகின்றன. இதனை, மறுவார்த்தையில் கூறுமிடத்துப் பார்வைக்குக் கிரகங்களின் சஞ்சார கதியில் பின்னடையும் தன்மை தோற்றமளிக்கின்றது எனலாம். இத்தகைய பின்னடைவுதான் வக்ரம் (Vakra) (Retrogression) எனப்படுகின்றது: சூரியனில் இருந்து ஒரு கிரகத்துக்குள்ள இடைத்தூரம் குறித்த அளவினின்றும் அதிகரித்தவிடத்து ஷை கிரகம் பின்னோக்கி நகர்வதனையே வக்ரநிலை எனப் பொதுவாகக் கூறுவர். ஆனால் இது ஒரு தோற்றமேயன்றி உண்மையல்ல; இது வெறும் மாயை; பொய்த்தோற்றம் (Illusion) என்று தான் கூற வேண்டும்.

நவக்கிரகங்களிலும் சூரிய சந்திரருக்கு வக்ர கதி இல்லை. இராகு கேதுக்கள் இயல்பாக வக்ர கதியிலேயே சஞ்சரிக்கின்றன. ஏனைய கிரகங்கள் (செவ்வாய்; புதன், குரு, சுக்கிரன், சனி) சூரியனுக்குக் குறிப்பிட்ட அளவு பாகைக்கு அப்பால் வர நேருமிடத்து வக்ர நிலையை அடைகின்றன. சுக்கிரன், புதன் இருவரும் சூரியனுக்கு 15 பாகை தூரத்திற்குள் வரும்போது வக்ரகதிக்குள்ளாகின்றனர். ஏனைய கிரகங்களான செவ்வாய், குரு, சனி மூவரும் சூரியனில் இருந்து 5, 8-ம் வீடுகளுக்குள் அமையும்போது வக்ர கதிக்குள்ளாகின்றன. எல்லாக் கிரகங்களும் (செவ்வாய் முதலிய ஐந்தும்) சூரியனில் இருந்து 5-ம் இடத்திற்கு வரும்போது வக்ர கதியையும், அவை 9-ம் இடத்திற்கு நகருங்கால் வக்ர நிவிர்த்தியையும் அடைகின்றன எனப் பொதுவாகக் கூறுவாருமுளர்.

ஜோதிட உலகில் கிரகங்கள் வக்ரநிலை அடைதலும், வக்ரகதியில் அதிகாரம் (நேர்வலமாகப் போதல்) பெறுதலும் வக்ர நிவிர்த்தி பெறுதலும் பிரதான விடயங்களாகவே கருதப்படுகின்றன. எனவே பலதீபிகை முதலிய பூர்வ கிரந்தங்கள் வக்ரநிலை பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை நாம் ஈண்டு கவனத்தில் கொள்ளுதல் சாலவும் பொருத்தமுடையதாகும்.

"வக்ர கதியை அடையும் கிரகம் பகை - நீசஸ்தானங்களில் இருப்பினும் உச்ச பலனைத் தர வல்லதாகின்றன." — பலதீபிகை

வக்ரகதியை அடையும் சுபாசுபக் கிரகங்கள் தத்தம் சுபாசுபத் தானத்திற்கேற்ப சுபாசுப பலன்களையே வழங்குவனவாக உள்ளன. உதாரணமாக நீசமடைந்த ஒரு சுபக்கிரகம் பாபியாகிப் பாப ஸ்தானத்தில் வக்ரகதிக்குள்ளாகுமிடத்து, நற்பலனை வழங்கார் என்பதாகும். பலதீபிகை ஆசிரியரின் ஷை கூற்றைக் கல்யாண வர்மாவும் தமது சாராவளியில் ஆதரித்துக் கூறுகிறார்.

"சுபக்கிரகங்கள் வக்ரநிலையில் ராஜயோகத்தைத் தரக்கூடிய வலிமை உடையனவாகவும், பாபக்கிரகங்கள் வக்ரகதியில் விபரீதமான தீய விளைவுகளைத் தருவனவாகவுமுள்ளன. -சாராவளி

ஆனால் காளிதாசரோ தமது உத்தரகாலாம்ருதத்தில் முற்கூறிய இருவரின் கருத்திற்கும் மாறுபட்ட வகையிலான கருத்தையே தெரிவித்துள்ளார்.

"வக்ரகதியடைந்த கிரகம் தன் உச்சஸ்தான பலனையே கொடுக்க வல்லதாகின்றது. ஆனால் ஷை கிரகம் வக்ரகதியுடன் சஞ்சரிக்கும் மற்றொரு கிரகத்துடன் இணையுங்கால் அதன பலம் அரைப் பங்குதான். உச்ச ஸ்தானத்தில் வக்ரமடையும் கிரகம் நீச பலனையும், நீச ஸ்தானத்தில் வக்கிர மடையும் கிரகம் உச்சபலனையும் தர வல்லதாகின்றன." — உத்தரகாலாம்ருதம்

எவ்வாறாயினும் வக்ரகதியில் சஞ்சரிக்கும் கிரகங்களின் பலாபலன் அவற்றின் இருப்பு, ஆதிபத்தியம் என்பவற்றைப் பொறுத்தே அமையும் என்பது மறுக்கொணா உண்மையாகும். "The effects of the retrograde Planets depend on their position and their ownership"
— The Astrological Magazine 1974 page 692.

தற்போது குரு, சனி ஆகிய இரு கிரகங்களும் வக்ரகதியில் சஞ்சரிப்பதை வாசகர்கள் நன்கறிவர். திருக்கணித பஞ்சாங்கப் பிரகாரம் குரு இவ்வருடம் ஜூன் 5-ம் திகதி முதலும், சனி கடந்த வருடம் மார்ச் மாதம் 8-ம் திகதியில் இருந்தும் வக்கிரகதி அடைந்துள்ளனர். இவ்விரு கிரகங்களின் வக்ர நிலையால் உலகநாடுகள் பலவற்றிலும் அரசியல் - பொருளாதார - சமூக விடயங்களில் விசித்திர மாற்றங்களையும் தாக்கங்களையும் நாளுக்கு நாள் ஏற்படுத்திய வண்ணமே இருக்கின்றன. அன்னை இந்திரா காந்தியின் படுகொலையும் அதனைத் தொடர்ந்து பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பதவிப்பிரமாணமும், பின்னர் வங்காள தேசத்தில் ஏற்பட்ட கோரச் சூறாவளி அனர்த்தங்களும் சனி வக்ரகதி அடைந்த பின்னரன்றோ.

வியாழன் வக்ரகதியில் செல்ல ஆரம்பிக்கவும் நெடுங்காலமாக நமது நாட்டில் இருந்து வந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாகத் திம்புவில் பேச்சுவார்த்தை ஆரம்பமாயிற்று. அது மட்டுமல்லாது முழுப் பாரத நாட்டிற்குமே பயமுறுத்தலாகவும், சவாலாகவும், இருந்து வந்த பஞ்சாப் பிரச்சினைக்கு ஓர் சமரசத் தீர்வு ஏற்படுத்தப்பட்டது.

இது இவ்வாறிருக்க இவ்விரு கிரகங்களினதும் வக்கிர கதியால் தனி மனித வாழ்க்கையிலும் தவிர்க்க முடியாத வகையில் தாக்கங்கள் ஏற்படவே செய்யும். இடபம், கடகம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய இராசியினர் இஷ்ட காரிய சித்தி, பணவரவு போன்ற நற்பலன்களையும் ஏனையோர் கஷ்ட பலன்களையும் காண்பர். குறிப்பாகத் தனு இராசியினர் விசேட பலன்களை எதிர்பார்க்கக் கூடியதாக அமையலாம்.

உங்கள் இல்லத்தின் பொக்கிஷம்

**திருக்கணித பஞ்சாங்கம்!**

## கன்னி லக்ன ஆணும் மிதுன லக்ன பெண்ணும் சேர்வது நன்மையானதா?

— வே. சின்னத்துரை —

கன்னி ஆணின் கெட்டியான பிரதிமையில் அவள் முதலாவதாக கவர்ச்சி கொள்வாள். ஏனெனில் அவளுக்கு அது ஒரு பாதுகாப்பான பிரதிநிதியாகும். தான் காதலிக்கும் பெண்ணுக்கு விருப்பமான எதுவும் ஊழியம் செய்ய ஒரு மனிதன் இருக்கிறானேயென்று அவள் தெளிவாக அறிந்து கொள்வாள். அவன் அவளுடைய மனத்தூண்டுதலை கொடுக்கவும், அவளுடைய புத்திநுட்பத்திற்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடியவனுமாவான். பின்பு எப்படியாயினும் அவனுடைய விவேக மனப்பாங்கு அவளுடைய வைதிகமல்லாத எண்ணங்களுடன் ஒத்துப் போகாதது அவளுக்கு எரிச்சலையுண்டாக்கும். பண விடயத்தில் அவனுடைய சின்னத்தனம் மெதுவாக அவளுக்கு மனக்கசப்பை உண்டுபண்ணும். அவளுடைய மனநிலை சடுதியாய் மாற்றமடைவதை அவன் விளங்குவது கடினம். இத்தன்மை அசாதாரணமானதென்று அவன் நினைப்பான். இப்பிரதிபலன் அவளிடம் பிரியப்படவிடாது. இப்படிப்பட்ட நெருக்குதலின்போது கூடுதலாக விமரிசிக்கிறானென்றும் கிழட்டுக் குமரிகள் போல்பவனென்றும் கூறுவாள். இப்படி மனமுடைந்தவன் அவள் குழப்பமானவள் என்றும், வீண்தன்மையுள்ளவளென்றும் நினைப்பான்.

மற்ற விடயங்களில் அவள் நிதானமற்றவளாய் இருப்பதனால் அதிக காலத்திற்கு இவள் அன்பில் அவனுக்கு அவநம்பிக்கை உண்டாகி அவனுக்குப் பாதுகாப்பில்லாமல் போகும். இப்பாதுகாப்பில்லா நிலையில் அவன் அதிகளவு விருப்பமின்மையை உண்டாக்கியிருப்பின் அவள் அதனாலே ஆக்கிரமிப்பில் இறங்குவாள்.

தொடக்கத்தில் ஒருவருக்கொருவர் இருந்த பாவீர்ப்பு மிக வலுவாயிருக்கலாம். ஆனால் தன் தனித்துவம் பாதிக்கப்படுமானால் அவளுடைய பாவீர்ப்பு அவனில் குன்றத் தொடங்கும். இதைப் பற்றி அவன் எள்ளளவும் அக்கறை பண்ணாவிட்டால் அவள் இவனை விட்டு வேறு இடத்தில் திருப்தியைத் தேடுவாள்.

இவ் உறவு கொஞ்சக் காலத்திற்கே நிலைக்கும்.

# ஆய்வு மன்றம்

சி. ச. சிவகுமார், வே. சாயுச்சதேவி,
டொக்யாட் வீதி, திரிகோணமலை.

புத்திரகாரகன் புத்திரத்தானத்தில் இருப்பது 'காரகா பாவ நாஸ்தி' என்ற அமைப்பால் புத்திரபாக்கியமில்லை என்றும் ஒருவிதி கூறுகின்றது. (இந்தவிதி சில சாதகங்களில் தவறிவிடுவதையும் அனுபவ ரீதியில் காண்கின்றோம்.) புத்திரத் தானத்தில் சந்திரன் இருந்தால் பெண் சந்ததியுண்டாகும் என்றும் ஒருவிதி கூறுகின்றது. எனவே இருவர் சாதகரீதியாகவும் தெய்வ அனுக்கிரகத்துக்கு வேண்டிப் பக்தியுடன் விரதாதிகளை அனுட்டிக்குமாறு ஆலோசனை கூறுகின்றோம். மேலும் சந்தேகங்களைத் தவிர்ப்பதால் பிரிவினைக் கேயிடமிருக்காது.

ஞானசம்பந்தன் வரதகுமார்
144/1, உவர்மலை வீதி, திருகோணமலை.

1957 ஏப்ரல் 07-ந் திகதி பி. ப. 5மணி 50 நிமிஷத்தில் சென்னமாகியவருக்கு, சென்ன நட்சத்திரம் (சரியான கணிப்பின்படி) திருவாதிரை 4-ம் பாதம். அதாவது சந்திரன் 79பாகை 46கலையில் இருக்கின்றது. அப்படியாயின் இராகு புத்தி நிகழ இன்னும் ஓராண்டுக்குமேல் இருக்கின்றதே!

எஸ். எஸ். யூ. தேவி, வெள்ளவத்தை.

உண்மையில் நீர் விரும்பினல் நடப்பு 34, 35, 36-ம் வயதுக்குள் விவாகசித்தி ஏற்படவேண்டும். விரும்பி முயன்ருல் வெளிநாடும் செல்ல வாய்ப்புக் கிடைக்கும்.

காசிப்பிள்ளை குலசேகரம், நெற்புலவு, பூநகரி.

பிரதான கிரகங்களின் கோசரசஞ்சாரம் முக்கியமாகக் குருவின் சஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. பக்தியுடன் குருப்பிரீதியும் தட்சணமூர்த்தி வழிபாடும் செய்து வருவதால் வெகுசீக்கிரத்தில் கஷ்டசாந்தி ஏற்பட்டு வேலையும்கிடைக்கலாம்.

வி. ஆர். சரவணபவன், கல்கிஸை.

நடப்பு 36 வயதின்மேல் தொழிலில் முன்னேற்றம் படிப்படியாக ஏற்படுவதுடன் மனம்போல் விவாகசித்தியும் ஏற்படலாம் என நவநாயகர்கள் சஞ்சாரம் மூலம் தெரிவிக்கின்ருர்கள்.

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..............................................................


விலாசம்: ..............................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..............................................

தமிழ் ..............................................

,, நேரம்: ..............................................

,, இடம்: ..............................................




ஜனனகாலம்...................... தசை இருப்பு

வரு.........மா.........நாள்.........

..............................................

கையொப்பம்

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 39

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபா லட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-10-1985க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப் படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு 8 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 39
சோதிடமலர்
மட்டுவில் .... சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ 1 | 2 | வ 3 | 4 | 5 | 6 |
| 7 | வ 8 | 9 | ஸ் 10 | 11 | ■ |
| 13 | ■ | 15 | 16 | ந 17 | 18 |
| ■ | உ 20 | 21 | ம் 22 | 23 | ம 24 |
| சா 25 | 26 | ம் 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | ■ | ■ | ம் 35 | 36 |

பெயர் ..........................................................

விலாசம் ..........................................................

..........................................................

இடமிருந்து வலம்:

1. அமாவாசை முதல் பூரணை ஈறாக வரும் திதி கள் இப்பக்ஷத்திற்குரியன.
7. நவராத்திரியின் இறுதி மூன்று தினங்களும் இவளுக்குரியது. குழம்பியுள்ளது.
15. 1952-53 காலத்திற்குரிய தமிழ் வருடம் குழம்பிவிட்டது.
20. 'சிறந்தது' என்பதைக் குறிக்கும் சொற்பதம் ஒளிந்துள்ளது.
25. ஆண் ஜாதகத்தின் 7-ம் இடம் இதனைப்பற்றி அறிய உதவும். குழம்பியுள்ளது.
31. தன்மைப் பன்மைப் பெயர்.
35. 168 மணிகள் கொண்ட காலப்பகுதி வலமிட மாகி நடு எழுத்து விடுபட்டுள்ளது.

மேலிருந்து கீழ்:

1. இத்தினத்தின்போது சூரியனும், சந்திரனும் இராசி நிலையில் ஒன்றுக்கொன்று 7-ம் வீடு களில் சஞ்சரிக்கும்.
2. பாவக் கிரகங்களை இவ்வாறழைப்பர். முத லெழுத்து நீங்கி தலைகீழாகியுள்ளது.
3. இளவேனிற் காலத்தை இப்படி அழைப்பர்.
4. ஆலய மகோற்சவ காலத்தில் இறைவனை இதில் ஆவாஹனஞ் செய்து பூஜை செய்வர். குழம்பியுள்ளது.
5. குழம்பியிருப்பது அசுவினி முதல் ரேவதி ஈறான இராசி மண்டலத்தின் 27 கூறுகள்.
18. தன காரகன் குரு போல ...... காரகன் சந்தி ரன் ஆவார். தலைகீழாகியுள்ளது.
20. கிரகங்களின் ஸ்தான பெலங்களுள் வலிமை கூடியது இது. 2-ம் எழுத்து தவறியுள்ளது.
25. அமெரிக்காவிலிருக்கும் உலகின் அதிசிறந்த வானிலை அவதான நிலையம் இது: மாறியுளது

## குறுக்கெழுத்துப் போட்டி 39-இன் விடைகள்

இடமிருந்து வலம்:

1. அக்கினி நாள் 7. ருசகயோகம் 13. (கா)ந்தம்
17. (மே)ளம் 19. கிருதம் 25. திரயம்
28. பாரி 32. துவாதசம்

மேலிருந்து கீழ்:

1. அருந்ததி 2. சதக்கிரது 3. கிருகம்
4. யோனி 5. நாகம் 6. உள்ளம்
22. பாதம் 29. சரி

பரிசு பெறுவோர்:

1-ம் பரிசு: கே. எஸ். இராமநாதன்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

2-ம் பரிசு: திரு. வ. வேல்முருகு,
34. கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம்

3-ம் பரிசு: செல்வி. நல்லம்மா நாகமுத்து,
8-ம் வட்டாரம், துறைநீலாவணை.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.


"மில்க்வைற்"

[illegible]




[illegible]

200 மில்க்வைற் [illegible] ஒரு I பாடசாலைப் பை (School Bag) இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


[illegible]

| | | | |
|---|---|---|---|
| சுத்த விபூதி: | [illegible] | [illegible] | 40-30 |
| [illegible] | [illegible] | [illegible] | 75-00 |
| [illegible] | [illegible] | [illegible] | 150-00 |
| [illegible] | [illegible] | [illegible] | 175-00 |

[illegible] 3-40 [illegible]

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





" மில்க்வைற் "
ஆதரவாளர்களின் அவதானத்திற்கு!
சென்ற காலத்து உங்கள் ஆதரவுக்கு நன்றி. எங்கள் தயாரிப்புக்களின் விலைகள் அவ்வப்போதைய மூலப்பொருட்களின் விலைகளைப் பொறுத்தன. இன்றைய விலைக்குறைப்பு எல்லோருக்கும் வாய்ப்பு. இந்த அரிய வாய்ப்பைப் பயன் செய்வீராக.

உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீலசோப் தற்பொழுது கூடிய நிறையுடன் புதிய முறையில் மெருகூட்டப்பெற்று எங்கும் விற்பனையாகிறது.

200 மில்க்வைற் நீலசோப் மேலுறைக்களைக் கொடுத்து 1 பாடசாலைப் பை (School Bag) இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ 40-80 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280